உ

# தமிழ்ப் பொழில்.

கரந்தைத் தமிழ்ச்சங்கத்துத் திங்கள் வெளியீடு.

துணர்: ௧. குரோதன-ஆனி. மலர்: ௩.

உ

## நாட்டுப்புறங்களின் கல்வியும், நாட்டாண்மைக் கழகங்களின் கடமையும்.

சென்ற இதழில், நாட்டுப்புறங்கட்குத் தகுதியாய கல்வி இத்தகைய தென்பதூஉம், அக்கல்விப் பயிற்சியின் முற்கால இக்கால நிலைகள் இத்தகைய வென்பதூஉம் ஒருவாறு குறித்து, அக்கல்விபற்றி நாட்டாண்மைக் கழகங்களின் கடமைகளை எடுதுரைக்கக் கல்விநெறியின் முதன்மையினைத் தோற்றுவாய் செய்துவைத்தேம். இதுபோது அக்கழகங்களின் கடமை இவையென எழுதுகின்றேம்.

நாட்டாண்மைக் கழகங்கள் செயக்கிடக்கும் அலுவல்கள் மிகப் பல வாதலும், அவற்றை இனிது முற்றுவிக்கும் பொருணிலைக்குரிய வருவாய் மிகச் சிறிதே யாதலும், அக்கழகங்களிற் காணப்பெறும் பெருங்குறையாகும். எனினும் கல்வி வளர்ச்சியைச் செய்யாததோர் கழகம் தனது கடமையைச் செய்துவருவதாக ஓராற்றானும் எண்ணப்படாமையின், கல்வி நெறியில் முதன்மையுடைய விரும்பும் கழகம் ஊர்தொறும் சென்று தங்கி, கல்வியின் இன்றியமையாமையையும், பயனையும்,

ஆங்காங்குப் பள்ளிக்கூடம் நாட்டுவதன் நலத்தையும், அது பற்றிக் கல்விவரி வேண்டப்படும் இன்றியமையாமையினையும், கல்விவரிபற்றி அரசியலார் தாமும் அளிக்கும் கொடைவருவாயின் நயத்தினையும் தெளிய எடுத்துரைத்து, நாட்டுப்புற மக்களின் இணக்கம் பெறுதல் வேண்டும். இங்ஙனம் கழகம் முனைகின்ற காலத்து, நாட்டுப்புற மக்களுட் பலரும், கழக உறுப்பினருட் சிலரும் எதிர் நிற்பதும் உண்டு. அந்தோ! நாட்டுப்புறத்தினரின் நன்மை புரிதற்கெனவே உறுப்பினராகி வந்த இவ்வுறுப்பினர் தாமும் தக்கதின்னதென உணரார் ஆகுங்காலை, ஏனையோர் மேற்குறை கூறலெங்ஙனம்? இத்தகைய உறுப்பினர் கல்வியின் உதவியின்றியே எத்தகை உயர்நிலைக்கும் ஒருவர் வந்துவிடல் கூடுமெனற்குத் தாமே சான்றாக நிற்றலின், கல்வி பற்றிய செலவுகள் வீணாகும் எனும் முடிபுடையரோ! அன்றித் தம்மை இளமையிற் புறக்கணித்தொதுக்கிய கல்வியைத் தமக்கு ஆங்காலமாகிய இதுபோது அடக்கி ஒடுக்க வேண்டும் எனும் நோக்கமுடையராவரோ! அறியேம். இத்தகையார் கூட்டுறவைக் கழகம் எதிர்பார்த்தல் இயலாததொன்றே! எனினும் கல்விவளனும், உண்மைப் பொதுவூழியமும் மேவிய ஏனை உறுப்பினர்கள் 'மெய்வருத்தம் பாரார்........எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்-செவ்வி, அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார், கருமமே கண்ணாயி னார்' என்ற அருமைச் செய்யுட்கு இலக்காகிக், கல்விவரி முதலியவற்றால் பொருள்வளம் பெருக்கிக் கோடல் வேண்டும்.

இனி, 'பள்ளிக்கூடம் இல்லாத ஊர் பாழூர்' ஆதலின், நாட்டுப்புறங்களில் உள்ள ஒவ்வோர் ஊருக்கும் ஒவ்வோர் பள்ளிக்கூடம் இருத்தல் இன்றியமையாததாகும். போதிய அளவு மக்கட்டொகை இலதெனும் ஏதுவினால், எவ்வூரினையும் நெகிழ்த்தல் எங்கும் கல்விவரிவாங்கும் கழகத்திற்கு முறையாகாது. கழகங்களின் கீழ் நடைபெறும் பள்ளிக்கூடங்களிற் சில இருக்குமிடமும், அவற்றின் ஆசிரியர், மாணவராவர் யாவரென்பதூஉம் அவ்வவ்வூரார்க்கும் தெரியாமல், கழக நிலையங்களின் கணக்கு

வழக்குக்களால்மட்டில் அறியப்படுதலும் சில்லிடங்களில் உண்டு.
(இது, அரசியற்றுறைகளில் மாறுபட்டு நிற்கும் பலவகையின
ரும், தங்கள் தங்கள் நகரங்களில், தத்தமக்கு உரிய இடங்களில்,
ஆயிரக்கணக்கினராகக் கூடி, ஒருமித்த பலமுடிபுகள் செய்து
அம்முடிபுகளைச் செய்தித்தாள்களில் வெளியிட்டு வரவும், அந்
தந்த நகரங்களில் வதிந்தும், ஏனோர், அவ்வுண்மை நிகழ்ச்சிகளை
நேரில் அறியலாகாது வியப்பெய்துவதனோடு ஒத்து, நாட்டுப்
புறத்தினர்க்குப் பெருவியப்பினைத் தருவதொன்றாகும்.) மேலும்,
பிழைக்குறிபோலும் மாணவர் வருகைக் குறிப்பினையும் அன்
றன்று போடாமல், தமது நினைவாற்றல் வெளிப்படத், தேர்ச்சிக்
காலங்களின் சிறிது முன்னர்ப் போடுதலும், அத்தேர்ச்சிக்காலங்
களில் (தேர்ச்சி அன்றுகூட) மாணவர்களை வலையிட்டுக் கூட்டுத
லும் வல்லாராய ஆசிரியர்களும் சில்லிடங்களில் உளர். ஆகவே,
கழகத்தினர், பள்ளிக்கூடம் அமைத்தலினும், அவற்றைக் கழகத்
தின் சார்பினராக நின்று மேற்பார்வையிடுவோராய ஒருவர் இரு
வரினை அமைத்து, அவர்கள் அவ்வப்போது எதிர்பாராமற்
சென்று ஆராய்ந்து வருவதன் வழியாகப் பள்ளிக்கூடங்கள்
செவ்வனே நடைபெற்றுவரச் செய்வதே முதற் கடனாதலை
உணர்தல் வேண்டும்.

இனி, ஆசிரியராக அமைந்துள்ளார் முன் இதழிற் கூறி
யாங்கு எத்தகை நிலையில் உளராக விருப்பினும், அவர்களை
நாட்டுப்புறக் கல்விக்கு ஏற்ற ஆசிரியராக ஆக்கிக்கோடல் வேண்
டும். தாய்மொழிப் பயிற்சி மிக்குடைய பண்டிதர்கள் நாட்டுப்
புறங்கட்குப் பெரும்பயன் செய்யும் தகுதியுடையோராகலின்,
பண்டிதர்கள் இத்தகைய வேலையை விரும்புமிடத்து அவர்கட்கு
முதன்மைதந்து அளித்து வருதல் வேண்டும். தமிழ்ப்பயிற்சி
மிக்காரை வேண்டா ஊர்கள் யாண்டும் இல. இருவர், மூவர்
ஆசிரியராக இருத்தற்குரிய பேரூர்களிலெல்லாம் தாய்மொழிப்
பயிற்சி மிக்கார் ஒருவராதல் முதன்மை யாசிரியராதல்வேண்டும்.
மேற்பார்வை யிடுவோர் தாய்மொழிப் பற்றும், பயிற்சியும் மிக்
குடையோராதலொடு, பழக்கக் கல்லூரியின் உயர்நிலைத் தகுதி

கள் பெற்றோராயுமிருத்தல் வேண்டும். மேற்பார்வையாளர் ஒருவரின் மிக்கு வேண்டியவிடத்து, தாய்மொழிப் புலமை யுடையோர் ஒருவரை அமைத்தல் வேண்டும். இனி, இம்மேற் பார்வையாளர், ஆசிரியர்கட்கெல்லாம், நாட்டுப்புறக் கல்விபற்றி அவர்கள் உணர்ந்து கொள்ளற்பாலன இவையென வரையறை தந்து, அவ்வுணர்ச்சி நிரம்பியதன் அறிகுறியாக கழகத் தேர்வு களின் தகுதிச் சீட்டுக்கள் அளித்து வருதல் வேண்டும். இத் தகைத் தகுதிச் சீட்டுக்கள் பெறுவார்க்கு மிக்க ஊதிய வளர்ச்சி கள் செய்து தருதல், யாவரும் விரைவில் அத்தகுதிகளை நிரப் பிக்கோடற்குரிய சிறந்த வழியாகும். இத்தேர்வுகட்கு உரிய கலைகள்:—ஆத்திசூடி முதலிய சிறு நூல்கள்; நாலடியார், திருக் குறள் முதலிய பெருநூல்களின் திரட்டாகிய பல பாக்கள் தாய்- நாட்டன்பு, தாய்மொழியன்புகளை ஊட்டும் இன்னிசைப்பாக் கள்; சமயப் பெரியார்கள் செய்த அருட்பாக்களுள் தெள்ளிய (எளிய) பாக்கள் ஆகிய இவற்றினோடு, பண்டைப்பெரும் புலவர்கள், சமயப்பெரியார்களின் வரலாறுகள்; சமய ஒழுக்க நூல்களாகிய சிறுவினுவிடைகள்; தமிழ்ப்புலவர்கள் எழுதிய இனிய கட்டுரை நூல்களாகிய உரைநூல்கள் முதலியவுமாகும். மேலும், எண்சுவடி யுணர்ச்சியோடு கூடிய தமிழ்க்கணக்கு வகைகளெல்லாம் இத்தேர்வுக்ட்கு உரியனவாகும்.

இனி, ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் மேற்கூறிய தேர்வு கட்கு உரிய நூல்களுடன், பொது அறிவிற்கேற்றனவாகிய சிற ந்த தமிழ் நூல்கள் பலவும், திங்கள் வெளியீடுகள், நாள் வெளி யீடுகளுட் சிறந்தன சிலவும் ஒருங்கு ஈட்டிவைக்கப்பெற்றுள்ள நூனிலையம் ஒன்று வைத்தல் வேண்டும். இவ்வாசியர்களும், மேற்பார்வையாளர்களும் முத்திங்களுக்கொருமுறையாதல் தக்க தோரிடத்திற்கூடிப் பல ஆய்வுரைகள் உரைத்தும் கேட்டும் பய னுறச் செய்து வருதல் வேண்டும்.

இனி, இறுதியாக உரைப்பதொன்றுண்டு. உலகில் உள்ள பலவகைத் தொழில்களில், உடற்பிணிநீக்கும் மருத்துவத் தொழி லும், உயர்ப்பிணியாய அறியாமையை நீக்கும் ஆசிரிய நிலையுமே

தலைசிறந்தன வாதல் யாவரும் ஒப்புவதாகும். இவ்விரண்டனுள்ளும், பிந்தியதே சிறப்பின் முந்தியதெனக் கூறல்வேண்டா. இங்ஙனமாகவும், ஆசிரியத் தொழிலினைத் தக்காங்குமதித்து ஊதிய நெறியில் உயர்த்தாமையின், நமது நாட்டினர், தாம் எண்ணும் முன்னேற்றம் அடையா தொழிகின்றனர். ஒரு நாட்டின் முன்னேற்றம்-பல்வகையான குறைவுகளும் முதிர்ந்து இனித் திருத்துதற்கியலாத பருவம் வாய்ந்த வயதானவர்களால் அடைவது எங்குமில்லை, என்று மில்லை. நாட்டின் முன்னேற்றத்திற்குரிய குணங்களை யெல்லாம், இனிப்பெற்றுவரும் பான்மையராகிய இளைஞர்களிடத்தேதான், நாட்டின் முன்னேற்றம் நிற்கும். எனின், அவ்விளைஞர்களை அத்தகைய உயர் குணங்கட்கு உரியராக்கும் ஆசிரியர்களிடத்தேதான் நாட்டின் முன்னேற்றம் நிற்கின்றது எனல் மிகையாகாது. ஆகவே, நாட்டின் முன்னேற்றத்திற்கெனக் கோடிக்கணக்கான தொகைகள் செலவிடப்பட்டும் பயனெய்தாமையின் காரணம், நேர்வழியாய ஆசிரியர்கள் விருத்தியில், செலவிடப்படாமையே யாகுமன்றோ! ஆகையான், கழகங்கள், ஆசிரியர்கள் ஊதிய நெறியில் மிகுவளர்ச்சி காட்டித் தக்க ஆசிரியர்களையே கொண்டு நாட்டுக்கு நன்மை புரிந்து வருவனவாக.

இதழாசிரியர்.

உ

# கடவுட் காட்சி விரி.

உலகியல் விளக்க நூலாசிரியராகிய
கண்ணபுரத்துக் கவுணியன் வெண்ணெய்க்கண்ணனூர்
பாடியது.

கட்காண் கில்லாக் கடவுளொடு கடல்புடை
சூழ்தரு முலகிடை வாழ்தரு கடவு
ளோரே முண்டென வுரைப்ப; அவற்றுள்
ஒன்றே,

தன்னுயிர் தன்னி னொருபுடை நல்கி
யென்னை யியங்குவா னியற்றித் தன்னல
னென்னுங் கருதில தாகித் தனது
பேறெனக் காத்துப் பெட்டன். றம்மா;
இரண்டே, உறுப்புற் றுண்ணவு மூரவுந் தனது
கருப்பையிடை நொந்து சுமந்து கனிந்து
விருப்பளீஇச் செந்நீர்ப் பாலமு திருமையுந்
தந்தெற் காண்டொறுந் தனைமறந் தன்றே;
மூன்றே,
கழுத்துநாண் சுற்றுபு யாத்தடிமை யான்கொடு
கற்புவெளிப் படுத்தி யற்புக் கூரவு
மதுபெற் றுங்கெனை யன்பிற் பிணீஇ
யுன்னிற் றன்னையே யுன்னவு முரைக்கிற்
றன்னையே யுரைக்கவுங் காணிற் றன்னையே
காணவுங் கேட்கிற் றன்னையே கேட்கவு
மாண வுஞற்றியெனை மறக்கவைத் தன்றே;
நான்கே, என்னருங் கற்பி னிறைவடி வுயிர்க்கா
முதலாங் கடவுளொடு முறைமுதிர்ந் தன்றே;
ஐந்தே,
இவ்வுயி ரிம்பர்ப்பெற் றெளியேன் மரபுவாற்
கிணைந்துசுமந் துயிர்த்தின் பெய்தி யிரண்டாங்
கடவுளொடு நேர்ந்து களிப்புத்தந் தன்றே;
ஆறே, எனையறி யாதென் னுள்ளிருந் தென்னுறு
கற்புக் கடவு ளகட்டிடைக் கதுவி
யகப்பொரு ளார வருந்திய பயத்த தாய்ப்
புறப்பொருட் கிடனாப் பொலிவுகொ டெம்மி
னளிப்பும் பெறீஇத் தம்மளிப் பானே
யிருமைமுழு தீந்திவ் வுலகுபுரந் தரூஉ
மருமைச் செல்வத் தாருயிர்த் திருவெனக்
கருமைக் கட்கரு மணிதவழ்ந் தாடும்
பாவைமுன் வந்து பையத் தவழ்ந்தென
முன்னர்வந் தாடு முறைமைசான் றன்றே;

ஏழே, இயற்கைவளம் பாட வேற்பவறி வுறுத்துஞ்
செயற்கை காணு துபரிய புரோசா
மிச்சிறு கடவு ளியல்பிற் ருகிப்
போற்றினோர்க் கெல்லா மின்பம் புணர்ப்பிப்
போற்ருர்க் கெல்லாந் துன்பம் புணர்ப்பிக்
கற்று வருநர்தம் முயற்றுக் கோவ்வப்
பயனளித் தென்னும் பழியேற் கில்லா
நயன்ன் றில்லா நன்னீர்க் கல்வியின்
வயங்கியின் புறுத்தும் வண்மையார்ந் தன்றே;
அதனை, அந்தணர் நான்மறை முற்றுகென வேந்த
ரேந்து செங்கோ லார்ந்துமன் னுகவென
வணிகோர் பள்ளஞ் சமஞ்செய்து வருகென
வுழுநர் நிலமகட் டொழுகவளஞ் சுரக்கென
நம்முயி ரன்ன நாட்டுயிர்ப் பாகு
நந்தமிழ்த் தாயி னளினத் திருத்தா
ணம்மவர் நெஞ்சினு நாவினும் பயில்கென
மடவோர் கற்பர சாள்கென வானம்
வழுவாது பொழிகென வழுத்தித்
தொழுதல் செய்குதூஉந் றைபெறற் பொருட்டே.

---

உ

## தனிச் செய்யுள்.

### ஏழைமைப் பத்து என்னும் நெஞ்சறிவுறூஉக்கள்.

இதழாசிரியர் எழுதியது.

ஏழை யென் னெஞ்சே! ஏழையென் னெஞ்சே!
யான், என தென்னும் இருவகைப் பற்றும்
ஒழிதல் என்ருே! உய்தல் என்ருே!
என்றெலாம் மயங்கும் ஏழையென் னெஞ்சே!
யானலா வுடம்பினை யானென மயங்கிப்
பற்றுறும் அறியாப் பெற்றியம் யாமோ!
பொருட்பற் றின்மையும் போக்கிக் கூறுதும்.

இவ்வுடல் ஒன்றே! எத்துணைப் பலவோ
அருமை நம் வினைகள் அளித்தன! அளிப்பன!
உண்மையிஃ தோர்வேம் உடலினைப் பேணலென்?
உணவினும் செயலினும் உறுவதீங் காயின்,
மிகினும் குறையினும் மிகும்நோய் என்றே
நுவல்பெரி யாருரை நுணுகியாய்ந் தேம்போல்
நிறைவயி றுவதோர் நேரள வொழியேம்!
குறைதலை இழிவெனக் குறித்ததும் ஓர்வேம்!
நெடுநாள் நீண்டு நீள்துயர் தராமே,
வறிதிருந் தறியேம்! சிறுகுறை யுஞ்செயேம்!
நாளையென் றொழியேம்! வேளையொன் றொழியேம்!
விரதமென் பனவுமா **விரதமாக்** கொள்வேம்!
அன்புறு மனையாட் காம்பல் லுழைப்பதாம்
இல்லு ளொன்றே! இடந்தொறும் இடந்தொறும்
உணுக்கடை கண்டுழி உணுங்கடை யாக்கிப்
படுகுளிர் நாட்டவர் சுடுசுடு தீக்குடி
முகஞ்சுளித் தருந்தி யகங்களித் தகல்வேம்!
உண்டுடன் வருதலைக் கண்டும்நம் அன்பர்கள்
இலையமர்ந் தேனும் யெழுகவென் பார்க்கும்
இலையென தாங்காங் கியலுவ புகுத்துவம்!
கழிவதே யின்பெனுங் கருத்தினை யொவ்வேம்!
மருந்தென யாதும் அருந்திலம் யாண்டும்!
வெட்பமென் றேரேம்! தட்பமென் றேரேம்!
சிலவே யாய சிறுதொழி லேனும்,
உளவலி யதனினும் உறுவது தேரேம்!
அகலாக் கவலைகள் மிகமிகக் கொள்வேம்!
குறைவிலாப் பன்னோய் குலவி வாழ்ந் திடவுடல்
வரையா தளிக்கும் வள்ளிய மாவேம்!
எனவே, உடற்பற் றியாங்ஙனம்
உடையேம் ஆய்ந்தனை உரைத்தியென் னெஞ்சே!

---

**T. V. இரத்தினசாமி.**

உ

# சிலாசாசனம்.

இச்சாசனம் திருக்கண்டியூர் ஆலயத்தில் அம்மன் கோயில் கீழச் சுவரில் வெட்டப்பட்டுள்ளது. இது, தஞ்சையிற் பெரிய கோயில் எடுப்பித்த முதலாவது இராஜராஜன் (985-1013) மகன் இராஜேந்திர சோழனது ஆறாம் யாண்டுச்சாசனமாகும். இதிற் பண்டைக்காலத்து வழக்குகள் சில அறியக் கிடத்தல் காண்க.

திருமன்னி வளர இருநில மடந்தையும்
போர்ச் செயப் பாவையும் சீர்த்தனிச் செல்வியும்
தன்பெருந் தேவிய ராகி இன்புற
நெடிதியல் ஊழியுள் இடைதுறை நாடும்
துடர்வன வேலிப் படர்வன வாசியும்
சுள்ளிச் சூழ்மதிள் கொள்ளிப் பாக்கையும்
நண்ணற் கருமுரண் மண்ணைக் கடகமும்
பொருகட லீழத் தரைசர்தம் முடியும்
ஆங்கர் தேவிய ரோங்கெழில் முடியும்
முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
சுந்தர முடியும் இந்திர னாரமும்
தென்றிசை ஈழ மண்டல முழுவதும்
எறிபடைக் கேரளர் முறைமையிற் சூடும்
குலதன மாகிய பலர்புகழ் முடியும்
செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத்
தொல்பெருங் காவல் பல்பழந் தீவும்
மாப்பெருந் தண்டாற்கொண்ட கோப்பரகேசரி

[வம்மரான

ஸ்ரீ ராஜேந்திர சோள தேவற்கு யாண்டு ஆறுவது நித்த
விநோத வளநாட்டு கிழார் கூற்றத்து ஆயிரத்தளிப்பால் ஸ்ரீ வான
வன் மாதேவீச்வர முடையார் தேவதானம் இந்நாட்டு முடிச்
சோழ நாட்டு பட்டகள கடம்பூர் உள்ளிறங்கல் நிலம் அஞ்சே
முக்காலே நான்குமாவின் கீழ் முக்காலினால் காணிக்கடன் ராஜ
கேஸரியால் ஆண்டுவரை நெல்லு ஐஞ்ஞூற்றுத் தொண்ணூற்று
அங்கலனே பதக்கு நானாழி இவை நிவந்தஞ் செய்து கல்லில்
வெட்டுவிக்கவென்று உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு
பிரஹ்மதேயம் கேரளாந்தக சதுர்வேதி மங்கலத்து இராமன் அர
ங்கனான உத்தம சோழ பிரஹ்மராயன் சொல்ல உடையார்
ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர்...கைத்து தனதேவன் சூற்றியனும்
சங்கரஞ் சாத்தனும் கண்காணித்தளந்து கல்லில் வெட்டுவித்த
படி உடையார்க்கு சந்தி ஒன்றுக்கு திருவமுது அரிசி...நாழி
யாக மூன்று சந்திக்குத் திருவமுதரிசி குறுணி நானாழியும் உமா
பரமேச்வரியார்க்கு சந்தி ஒன்றுக்குத் திருவமுதரிசி நானாழியும்
ஆக சந்தி மூன்றுக்கு திருதமுதரிசி பதக்குக்கு உஞ.....க்கால்
நெல்லு ஐங்குறுணியும் உடையார்க்கு ஸந்தி ஒன்றுக்கு கறியமு
துக்கு நெல்லு......மூன்று ஸந்திக்கு நெல் நாழி யுழக்கும் ஸந்தி
ஒன்றுக்கு பருப்பமுது ஆழாக்காக மூன்று ஸந்திக்கும் உழக்
காழாக்கும் பருப்பு நாழிக்கு நெல்லு நாழி ஆழாக்கும் ஸந்தி
ஒன்றுக்கு நெய்யமுது இரு செவிடரையாக மூன்று ஸந்திக்கு
நெய்யமுது ஆழாக்கே இருசெவிடரையும் நெய் நாழிக்கு நெல்
லுத் தூணியாக நெல்லு ஆறுநாழியும் ஸந்தி ஒன்றுக்குத் தயிர
முது மூன்று ஸந்திக்குத் தயிரமுது நாழி உரிக்கு இரட்டி நெல்லு
முந்நாழியும் ஸந்தி ஒன்றுக்கு அடைக்காயமுது நாலுக்கும் இலை
யமுது எட்டுக்கும் ஆக நெல்லு மூழாக்காக மூன்று ஸந்திக்கு
இருநாழி உழக்கு திருவமுது கறியமுது அட ஸந்தி ஒன்றுக்கு
விறகுக்கு நெல்லு நாழியாக மூன்றுக்கு முந்நாழியும் இரவு பகல்
எரியும் திருநொந்தா விளக்கு இரண்டுக்கு எண்ணை உழக்காழாக்
கும் சிறுகாலை எரியும் ஸந்தி விளக்கு இரண்டும் உச்சியம்
போதெரியும் ஸந்தி விளக் கிரண்டும் இராவெரியும் ஸந்தி விளக்கு
நாலும் ஆக ஸந்தி விளக்கு எட்டுக்கு எண்ணை உழக்கும் ஆக

நாள் ஒன்றுக்கு திருவிளக்கு எண்ணை உரி ஆழாக்குக்கு எண்ணை
நாழிக்கு நெல்லூ தூணியாக நெல்லுப் பதக்கு நானாழியும் ஆகத்
திருச்சென்னடைக்கும் வேண்டும் எண்ணை தயிர் கறி விறகு
அடைக்கா யமுதுக்கும் ஆக நாள் ஒன்றுக்கு நெல்லு ஒரு
தூணிக்குறுணி ஐந்நாழி உரியாழாக்காக ஆண்டுவரை நாள் மூந்
நூற்றறுபதுக்கு நெல்லு ஒரு நூற்றுத் தொண்ணூற்றொரு
கலனே குறுணி ஒரு நாழி ஸங்கிராந்தி ஒன்றுக்கு வேண்டும் பல
விசத்துக்கு நெல்லு இருகலனே பதக்கு இருநாழியாக தக்ஷிணா
மயனமும் ஐப்பிசை விஷுவும் உத்திரமயனமும் சித்திரை
விஷுவும் ஆக ஆண்டுவரை சங்கிராந்தி நாலுக்கு நெல்லு எண்
கலனே இருதூணிக் குறுணி திருமெய்ப்பூச்சுக்கு ஆண்டுவரை
சந்தனம் நாற்பத்தைம்பலத்துக்கு காசு ஒன்றே அரைக்காலுக்கு
காசு ஒன்றுக்கு நெல்லு நாற்கலமாக நெல்லு நாற்கலனே தூணி
ப்பதக்கு திருப்புகைக்கு ஆண்டுவரை குங்குலியம் தொண்ணூற்
றுப்பலத்துக்கு காசு அரைக்கு நெல்லு ஒரு கலம் ஆண்டுவரை
திருப்பரி சட்டம் மூன்றுக்கும் திருமேற்கட்டி ஒன்றுக்கும் திரு
நமனிகை இரண்டுக்கும் உத்தரியப்புடவை நாலுக்குமாகக் காசு
இரண்டுக்கு நெல்லுப்பதின்கலம் கிரஹண முள்ளிட்ட சிறப்
புக்களுக்கு நெல்லு இருகலனே ஒரு நாழி யுரி புதியிதமிது
செய்தருள நெல்லு முக்கலம் கார்த்திகை விளக்கீட்டுக்கு
எண்ணை நாழிக்கு நெல்லு கலனே தூணியாக ஆண்டுவரை
நெல்லு மூந்நூற்று இருபத்து இருகலனே இருதூணி இருநாழி
உரியும்....பயற்றுக்கு கலத்துக்கு குறுணியாக......நெல்லு இரு
பத்தறுகலனே இருதூணிப்பதக்கு அஞ்ஞாழியும் மடமுடைய
வகுளீச்வர பண்டிதற்கு ஆசாரிய போகத்துக்கும் திருவாராதினை
செய்வா னொருவனுக்குமாக நாளொன்றுக்கு நெல்லுக்குறுணி
யும் பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்றுக்கு நெல்லு குறுணியாக
சிவபிராமணன் கௌ......அப்பன் அறுபத்து நால்வபட்டன்
மாண் இரண்டுக்கு நாளொன்றுக்கு நெல்லுப் பதக்கும் சிவப்
பிராமணன் புல்லாலி உக்ரப்பகை மாணிக்கபட்டன் மாணென்
றுக்கு நாளொன்றுக்கு நெல்லுக் குறுணியும் சிவபிராமணன்

பாரத்வாஜ தியம்பகன் ஐயாறன் மாணென்றுக்கு நாளொன்றுக்கு நெல்லு குறுணியும் கரணத்தான் கிளிநல்லூர் கிழவன் அரங்கன் இராமனுக்கு நாளொன்றுக்கு நெல்லுக் குறுணியும் திருவலகு திருமெழுக்கிடுவாளொருத்திக்கு நெல்லு நாழி உரியும் ஆக நிவந்தக்காரர்க்கு நாள் ஒன்றுக்கு நெல்லு இருதூணி ஒரு நாழி உரியாக ஆண்டுவரை நிவந்தக்காரர்க்கு நெல்லு இராயிரத்து......தைங்கலனே எழுகுறுணி நானாழியும் ஆக ஆண்டுவரை ராஜகேஸரியால் நெல்லு ஐஞ்ஞூற்றுத் தொண்ணூற்று ஐங்கலனே பதக்கு நானாழி யுரி. அற மறவற்க. அறமல்லது கைதாரா. இது பன்மாஹேச்வரர் ரக்ஷை.

எல். உலகநாதபிள்ளை.

---

உ

சிவமயம்.

# சங்ககாலச் சோழ அரசபரம்பரை.

(11-ம் பக்கத்தொடர்ச்சி)

‘சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளியான பெருவிறற்கிள்ளியும், முடித்தலைக்கோ பெருநற்கிள்ளியும் வேறலரோ? ஒருவராவரோவெனின், பல்வேறுபெயர்களைத் தாங்கிய ஒருசோழனே என்று காட்டலியலும். சோழ அரசாட்சியைப் பலதாயத்தார்களிருக்கும்போது, கரிகாலன் அடைந்தானென்பது மறுக்க முடியாததொரு உண்மைச்செய்தியாம். இக்கூற்றுக் ‘கழுமலத்தில் யாத்த களிறு’ என்ற முதற்குறிப்பையுடைய-நுணங்குமாணறிவின் மிக்க நூல்வலார் கூடிய பேரவையான கடைச்சங்கமேறிய பதினெண்கீழ்க்கணக்கி லொன்றான-பழமொழிச் செய்யுளான் வலியுறும். இச்செய்தியாற் சோழஅரசரிற் பலகிளைகளிருந்தன வென்றும், அக்கிளைகளைச்சார்ந்த பலதாயத்தாரோடும் முடிமன்னராயினரோடும் போர்புரிந்துவந்தனரென்றும், உட்கலாம் பல விளைத்தனரென்றும் அறிகின்றும். எஃகுவிளங்குதடக்கையிய

றேர்ச்சென்னியாம் நலங்கிள்ளியோடு பகைத்துத் திண்ணிலைக்
கதவி னீண்மதி லொருசிறை யொடுங்குத னாணுத்தகவுடைத்தெ
ன்று இழித்துக்கூறப்பெற்ற நெடுங்கிள்ளி துன்புறுத்தியும், துன்
பப்பட்டும் நாட்டில் அமைதியின்மையை யுண்டாக்கினன். பத்தி
னிக்கடவுள்பால் அன்புபூண்டு சிலையெடுத்தற்பொருட்டு வடநா
ட்டரசர்களைக் கீழ்ப்படுத்திய குடக்கோ நெடுஞ்சேரலாதற்குச்
சோணைமணக்கிள்ளி யீன்றமகனும் சேரன்செங்குட்டுவன் தன்
மைத்துனனை சோழன் ஏவல்பெறாரான தாயத்தார்பலரை நேரி
வாயிலிற் கீழ்ப்படுத்தி ஏவல்வழி நடக்கச்செய்தானென்று சில
ப்பதிகாரம் கூறும். இவைகளினாலே தலைமைபெறுதற்குரியனா
யும், வல்லமைவாய்ந்தவனாயும், முடியுடையனாயுமிருந்தமைபற்றி
யன்னானை முடித்தலைக்கோ பெருநற்கிள்ளி யென்றார் புலவர்
பெருமான்.

இவ்வாறன்றி, பதின்மூன்றாவது புறப்பாட்டிற்கண்ட முடித்
தலைக்கோ பெருநற்கிள்ளியோடு பொருதவன் சேரமான் அந்து
வஞ்சேரல் இரும்பொறை யெனக் காணப்படலின், முடித்தலைக்
கோ பெருநற்கிள்ளியும், பெருவிறற்கிள்ளியும் ஒருவனாயினும், அந்
துவஞ்சேரல் இரும்பொறையும், குடக்கோநெடுஞ்சேரலாதனும்
ஒருவராவரோ வென்ற கடாவெழும். இவர்கள் சேரர், ஒருவரல்ல
ரென்பதுண்மையே. ஆரங்கழுத்தன்னதாக்கிடந்துயிர்விட்டவன்
குடவர்கோமான். அதாவது குடநாட்டுக்கு அதிபன். மற்றவனோ
இரும்பொறை மரபினன். பதிற்றுப்பத்திற் காணப்படும் பதிகங்
களாலும், புறநானூற்றிற் காணப்படும் அரசர்பேர்களா
லும் அந்நாட்டில் இருபெரு மரபினர் ஒரேகாலத்திலாண்டு
வந்திருக்கின்றனரென்பது வெள்ளிடைவிலங்கல். இதுவன்
றிக் குடநாடு வேறு, குட்டநாடுவேறாகும்.

இரும்பொறை மரபில் சேரமான் அந்துவஞ்சேரல் இரும்
பொறை, கருவூரேறிய ஒள்வாட்கோப்பெருஞ்சேரலிரும்பொறை,
தகடூர் எறிந்தபெருஞ்சேரலிரும்பொறை எனப்பலராவர். குடக்
கோ பெருஞ்சேரல் ஆதன், குடக்கோ நெடுஞ்சேரல் ஆதன் முத

வியோராவர். இவ்வரலாற்றை உளத்திலிருத்துவோமாயின், ஒரே வேந்தன் பகைப்புலம் புக்கு ஒரு பேரரசின் கீழுள்ள இருபெரு வேந்தரோடு பொருதானென்று கேட்கும்போது, அதன் கண் வியப்பிருக்கக் காரணமில்லை. நுணிகியாராய்ந்து உரைகண்ட உரையாசிரியரும், இப்பாட்டிற்கு எழுதிய விசேடக்குறிப்பில் 'பெருநற்கிள்ளி களிறு கைமிகந்து பகையகத்துப்புகுந்தமையின் அவற்குத் தீங்குறுமென்றஞ்சி வாழ்க்கினமையின் வாழ்த்தியலாயிற்று' என்பர். உரையாசிரியரும் சோருள் இருவகுப்புண்டென்ற கொள்கையினராம் என்பது புலனாகின்றது. ஆகவே நலங்கிள்ளிக்கு முன்னும், கரிகாலனுக்குப் பின்னும் சோழுன் முடித்தலைக்கோ பெருநற்கிள்ளி பெருவிறற்கிள்ளி என்ற பெயரையுடைய் பெருநற்கிள்ளி ஆண்டானென்று கோள்வது அமைவுடையதாம்.

இனி, இவன் கரிகாலன் முதலாயினர்க்கு எவ்விதமான உறவுடையானென்று ஆராய்வோமாயின் சேட்சென்னி, இளஞ்சேட்சென்னிகளைப்போன்று கரிகாலனது இளவலாக இருந்திருக்க வேண்டுமென்று காண்கிறது. இன்றேல், பெருவிறற்கிள்ளி கரிகாலனிடத்துப் பெண்கொண்ட நெடுஞ்சேரலாதனோடு பொரக் காரணமில்லை. ஆனால், தனது மூத்தோனுடைய மகள் கணவனோடு பொருது உயிர் துறந்தானென்று படிக்கிறோமே. அவ்வாறு நடத்தலுமுண்டோவெனவினவுவிராயின், விக்டோரியா மகாராணியாரது பெண்வயிற்றுப்பிள்ளையும், பிள்ளைவயிற்றுப்பிள்ளையுமே பொருது வீன்றனர் என்று நாம் கண்கூடாகக் கண்டோமாகலின், வேந்தருள் அத்தகைய உறவு நீடித்திருந்ததில்லை யென்பது விளக்கமாகிறதென்பேம். அன்றி மகனெனக் கோடாமோ வெனின், அவ்வாறாயின், இவனது சிறப்புக்கூறியவிடத்து, அவ்வுண்மையைப் புலவர் புலப்படுத்தியிருப்பர்.

இனி இவ்வாறன்றி, ஹல்ஷ் துரைமகனார் தென் இந்தியக் கல்வெட்டுக்கள் † இரண்டாம் காண்டத்தில் பின்வரு

மாறு எழுதலாயினர்:— "[பிருதிவிபதியின் உதையேந்திரத்துச் செப்புப்பட்டையத்திற் கூறப்படும்] சோழர் குலமுறையில் [வமிசாவலி] கோக்கிள்ளி, சோழன் கரிகாலன், செங்கண் என்ற வரிசை காணப்படுகிறது. லேய்டன் பட்டையம் ‡ சோழன் கரிகாலன் கோச்செங்கண்ணன், கோக்கிள்ளி என்று தலைமுறை கூறும். கலிங்கத்துப்பரணியோ முதலில் கோக்கிள்ளி நாக கன்னிகையை மணந்தானென்றும், (VIII-18) பொய்கையாரின்-சமகாலத்தவனான கோச்செங்கண்ணனைப் பின்னும், அவன்பின் காவிரி கரைகண்டவனான கரிகாலனையும் கூறும். விக்கிரம சோழனுலாவில் கோக்கிள்ளியை முதலிலும் கரிகாலனைப் பின்னும், கோச்செங்கணனை முடிவிலும் கூறும். இந்நான்கும் நாலுவிதமாகக் கூறுவதைக் காணலாம். கோக்கிள்ளி பிலத்தின்வழியேசென்று நாககன்னிகையை மணந்துவந்தானென்பதால், அவன் சரித்திர சம்பந்தமுடையவனென்று சொல்வதற்கில்லை. விக்கிரமசோழனுலாவும் புராணசம்பந்தமுடைய அரசர்களான சிபி, கவேரரை முன்கூறுகின்றது. உதையேந்திரம், லேய்டன்பட்டையங்கள் கூறும் சோழவமிசமும் பல்லவவமிசத்தலைவராக அசுவத்தாமனையும் அவன் பிள்ளையையும் கூறுவது போலவே காண்கிறது.

"மற்றைய இருவர்களாகிய கோச் செங்கண்ணனையும், கரிகாலனையும் பற்றியோவெனின், அவர்களுள் ஒருவன் பொய்கையார் இயற்றிய களவழிக்குத் தலைவனும், மற்றவன் உருத்திரங்கண்ணனார் இயற்றிய பட்டினப்பாலைக்குத் தலைவனுமவர். கலிங்கத்துப்பரணி ஆசிரியர் இவர்கள் முதற்பராந்தகன் காலத்துக்கு முன்னென்று நினைப்பதால் இவர்கள் முற்பட்டவர்களாயிருக்கவேண்டும். தன் முன்னோர் சரித்திரத்தை இமையத்திற் பொறித்த கரிகாலனுக்கு முன்னே செங்கணனைக் கலிங்கத்துப் பரணிகுறிக்க லீடன்பட்டையமும், விக்கிரம சோழனுலாவும் கரிகாலனுக்குப் பிற்பட்டவன் செங்கணனென்று கூறும். மேலும் லீடன்பட்டையம் கதையிற் கேட்கப்படும் கிள்ளியைச் செங்கணன் வமிசத்தனென்றுஞ்சொல்லும்.

இவைகளைச் சீர்தூக்கி நோக்குவோமாயின், இம்மூன்றும் பிறக்குங்காலத்துத் தகுதியான, முறையான குலமுறைகிளத்தும் சாதனமொன்றுமிருந்ததில்லை யென்று கூறுகிறது. களவழி, பட்டினப்பாலைபோன்ற நூல்களிற் கண்டதைக்கொண்டு இவைகளைக் கட்டியிருக்கலாம். இவர்களையெல்லாம் கல்வெட்டிற்கண்டோரது முன்னோராகக் கோள்வது பிழையாகும். இவர்கள் இறந்துபட்ட சோழவமிசங்களின் பிரதிநிதிகளென்றும், அவர்கள் பெயர் தற்செயலாகவோ அரும்பெருஞ் செய்கைகளாலோ நிலைநின்றபெயர்களென்றும்கொள்ளவேண்டும். (S. I. I. Vol II (PP 377-378).

இவ்வாறு இவர் கூறுவதினுண்மையை விசாரிப்போம், மேலேகண்ட விதமாக ஹுல்ஷ்துரை எழுதிய பின்னர், திருவாலங்காட்டுச்செப்புப்பட்டையம் கிடைத்தது. அதனில் 'கமலாகலாகரஃபெருநக்கிள்ளி ரபூத்தகன்வயே' என்றுகாணப்படுகிறது. செல்வத்துக்கிருப்பிடமானவனும், பலவரசர்களாலும் தொழப்பட்டவனுமான பெருநற்கிள்ளி தோன்றினான் என்பதுபொருள். இதற்குப் பதிலாக, இவன் நாககன்னிகையையான பீலிவளையை மணம்புணர்ந்த கிள்ளிவளவன் என்று டாக்டர் ஹுல்ஷ்கொண்டது யாதுகாரணம்பற்றியோ இதுபொழுது அறிவதற்கில்லை. இந்தத் துரைமகனாரைப்பற்றியேகல்வெட்டுத்துறைக்காரர் எழுதலாயினர். இங்ஙனமின்றி, பெருநத்கிள்ளி என்று கொண்டார்களென்றால், அப்பொழுதும் கிள்ளிவளவனைக் குறிக்காதென்பதைக்காண்க.

இப்பெருநற்கிள்ளி என்றபேருடையார் இருவராவாரென்று முன்னர்க்குறித்துள்ளாம். ஒருவன் முடித்தலைக்கோ பெருநற்கிள்ளி, மற்றவன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி. இவருள் முடித்தலைக்கோ பெருநற்கிள்ளி கரிகாலனுக்குப்பிந்தியவனென, முன்னர்க்காரணங் காட்டப்பட்டது. (தொடரும்)

திரு. சோமசுந்தர தேசிகர்.

உ

# வாய்மை.

(80)-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இனி, இவ்வுண்மையினை எதிர்மறை முகத்தானும் ஒருசிறிது வற்புறுத்துவாம். உண்மைக்கெதிர்மறை உண்மையின்மை. அஃதாவது பொய்ம்மையாம். உள்ளதை யில்லதாகவும், இல்லதை யுள்ளதாகவுங் கூறல் பொய்யாம். அது பஞ்சமாபாதகங்களி லொன்று. அஃதே யெல்லாத் தீயகுணங்களையும் உண்டுபண்ணுவது. அதுதொன்றொழிப்பின், மற்றைப் பாவச்செயலெல்லாந் தாமே யொழியும். பொய்யின் றன்மைபற்றிக் காசிரகசியம், "பொய்ம்மையே பிறவி யெல்லாம் விளைதரு பூமி யாகும்-பொய்ம்மையே பிறவி யெல்லாம் புகப்புரி வித்து மாகும்-பொய்ம்மையே வறுமை யெல்லாம் போதரப் புரிவ தாகும்-பொய்ம்மையே நரக மெல்லாம் புகுதரப் புகுத்தா நிற்கும்" என்றும், அதன் பயனைப்பற்றி, "மறைமுழு துணர்ந்தா ரேனும் மகம்பல புரிந்தா ரேனுங்-குறைவறு தான மெல்லாங் கொடுத்தறங் கூர்ந்தா ரேனும்-நிறைபெறுந் தீர்த்த மெல்லாம் நிரம்புறத் துளைந்தா ரேனுங்-கறையுறு மொரு பொய் கூறிற் கடுநர கழுந்து வாரே" என்றுங் கூறுகின்றது. இத்தகைப்பொய்யை விளையாட்டுக்காயினும் புகலலாகாது. புகலின், அவரை யெவரும் எக்காலத்தும் நம்பமாட்டார்கள். இதனை யொருசிறு கதையான் அறியலாம். ஓரிடையன் ஒரு நாட்டிற்குங் காட்டிற்கு மிடையுள்ள மைதானமொன்றில் தன்னுடைய வழக்கம்போல் மேய்த்துக்கொண்டிருந்தான். ஒருநாள் வேடிக்கையாக "ஓநாய், ஓநாய்" என்று கூக்குரலிட்டான். சிறிது தூரத்தொரு தோட்டத்தில் வேலைசெய்துகொண்டிருந்த தோட்டக்காரர் அவ்விடையனுக் கேதோ ஆபத்து நேர்ந்திருக்கிறதாக நினைந்து, மனமிரங்கி, யுதவுவா னோடிவந்தார். அவர் கிட்டிய துடனவரைப்பார்த்து, நீவிர் என்னால் ஏமாற்றமடைந்தீர் எனச் சிரித்தான். அவ்வாறிருமுறை யவரை யேமாற்றிப் பரிகசித்தான்.

பின்னொருகால், தற்செயலாய் ஓநாய்கள் வந்துவிட்டன, அப்போது பழையபடி கூக்குரலிட்டான். அத்தோட்டக்காரர் முன்போல் வேடிக்கையென நினைந்து வந்துதவவில்லை. ஓநாய்களோ ஆடுகளையு மவனையுங் கொன்று தின்றுவிட்டன. ஆகலின், நாம் எப்போதும் உண்மையே பேசல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது. இதுவரை கூறியவையெல்லாம் வியாவகாரிகத்திலடங்கும். இனிப்பாரமார்த்திகத்தைப்பற்றிச் சிறிது பகர்வாம். பாரமார்த்திகம் இன்னது என முன்னர்க் கூறினும், அது வியாவகாரிகத்தினுஞ் சிறந்தது. என்னை? பாரமார்த்திகத்தை நோக்க வியாவகாரிகம் பொய்யாகலின். இதனைத் திருசாந்தலிங்கசுவாமிகள் வைராக்கியசதகத்து, "உய்தும் நெஞ்சமே வாக்கினை மௌனமாக் கிலையெனி னுளதேசொல்-மெய்த ருஞ் சொலும் பொய்நயம் பயக்கிலா விடத்தினை துடைத்தேனும்-பொய்த ருஞ்சொலி யான்செய்தேன் பிறர்செய்தா ரெனி னவை போனுலும்-எய்த ருஞ்சிவ மன்றிதென் றென்றைநீ யிசைத்தல்பொய் யெனத்தேரே" எனக்கூறியுள்ளார்கள். இது ஞானசாரங் கூறுமிடத்து, நெஞ்சை முன்னிலையாக்கி விவேகங் கூறியதாகக் கூறப்பட்டது. இதன்பொழிப்பு:—நெஞ்சமே! ஞானநிட்டையை இடைவிடாது கூடி, அஞ்ஞானத்தின் வசப்படாது திருவடியடைந்து யாம் பிழைப்போம்; நீ ஒருரையுங் கூறாது வாக்கினை மௌனம் பண்ணுதல்செய். அஃதின்றெனினும், வினோதத்தாலாயினும் ஒருபொய்ம்மையுங் கூறாது உண்மையே சொல்லுக. அங்ஙனம் மெய்ம்மையாயுள்ள சொல்லும் பொய்யென்று விவேகங் கூற; அதற்கு, வினோதத்தாலாயினும் ஒரு பொய்யுங் கூறற்கவென்று முன்னர்க் கூறினீர். இப்போது அம்மெய்ம்மைகூறலும் பொய்ம்மையென்றீர். இஃதென்னையென்று மனங்கேட்ப; அதற்கு, அம்மெய்ம்மையாற் சிவகருணையாய நன்மை உண்டாகாவிடத்து அது பொய்ம்மையாமென்று விவேகங்கூற; அதற்கு, இஃதுண்மையென்று மனஞ் சம்மதிப்ப; அதற்குச், சிவகருணையைக் குறித்துப் பொய்ம்மை போன்ற மெய்ம்மை கூறுவதுளதாயினும், அம்மெய்ம்மையும் பொய்ம்மையுடைய சொல்லென்று விவேகங்கூற; அதற்கு,

முன்னே மெய்ம்மை கூறினும், சிவகருணையில்லா விடத்துப் பொய்ம்மை யென்றீர். இப்போது பொய்ம்மைபோன்ற மெய்ம்மை யுளதாயினும், இஃதும் பொய்ம்மை யென்றீர். இஃதென்னை யென்று மனங்கேட்ப; அதற்கு, இருவினைக்கீடாகத் திருவுளம் நடாத்துதலை மறந்து, உன்னால் ஒருயிர் காக்கப்பட்டவிடத்து, அதனைப்பிறர் கொலைசெய்ய வந்தார், யான் காத்தேன் என்று, இங்ஙனம் யான் செய்தேன், பிறர் செய்தார் என்று சொல்லுவாயெனின் என்று விவேகங்கூற; அதற்கு, இஃதும் உண்மையென்று மனஞ் சம்மதிப்ப; அதற்கு, நீ யான்செய்தேன், பிறர் செய்தார் என்று சொல்லும் இப்பொய்ம்மைகள் சொல்லாதொழியினும், பெறுதற்கரிய சிவமன்று ஈது என்று ஓரணுவையாயினும் வேறுபிரித்துச் சொல்லுதலும் பொய்ம்மையென அறிதி என்று விவேகங் கூறிற்று என்பதாம்.

இதனால், பரம்பொருள் நம் வினைக்கீடாக நடாத்துதலை மறந்து, ஆணவமுனைப்பினால், யான் செய்தேன், பிறர் செய்தாரெனல்தகாதென்றும், அப்பரம்பொருளே எல்லா வடிவாயுமிருக்கின்றதென்றும், அதற் கன்னியமா யொன்றைக் கூறல் குற்றமென்றும் பெறப்படும். இன்னும், யான்செய்தேன், பிறர்செய்தாரெனல் குற்றமென்பதை, "விரும்புற்ற தவம்விரதஞ் சீலமெல்லாம் மேல்வினையென் றறிந்தெவையும் விமலன் கூத்தென்-றிரும்புற்ற மனமழலின் மெழுகாயென்று மியான்செய்தேன் பிறர் செய்தா ரெனுங்கோ ணீக்கி-யரும்புற்றங் கெண்ணுதியா னென்னும்பாசத் தவாமருவும் புறப்பற்றே டகப்பற் றுன-பெரும்பற் றை யகன்றருளைப் பெறுவோர்ஞானப் பெரும்பற்றப் புலியூரைப் பிரியார் தாமே" எனச் சிவஞானதீபமும், பரம்பொருளொன்றே எல்லாவடிவாயுமிருத்தலை, "நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்—புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்-உலகே ழெனத்திசைபத் தெனத்தா னொருவனுமே—பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ" எனத் திருவாசகமும், "எங்குஞ் சிவமொழிய இல்லையவன் றன்னருளைப் பங்கந் திரள்கருவி யாணவமாம்—பொங்குமிருண் மைசெய்த

மாமாயை மாயவினை மற்றனைத்தும்—பொய்பொய்பொய் பொய் பொய்பொய் பொய்'' எனச் சிவானந்த மாலையும், பரம் பொருட் கன்னியமாய் வேறொன்றிற் றிருப்புக் கூறல் குற்ற மென்பதை, "இருப்பு வெறுப்பென்று வேறுபொருள் கோட லிறை யுறுப்பிற் குறைபாடோ வுணர்வுடையோர் சொல்லு வரோ'' எனச் சிவாநுபூதிவிளக்கமுங் கூறும். ஆகவே, நுணுகி யாராயின், பரம்பொருள் ஒன்றே பாரமார்த்திக உண்மை யென் பதும், அதனோடொத்தஇருப்பு வேறொன்றற் கின்றென்பதும், அஃதே யெல்லாவற்றிற்கு மாதாரமா யுள்ளதென்பதும், அதனைக் கைக்கொண்டாற்றான் பிறவிப்பிணியற்றுப் பேரின்பமடையலா மென்பதும், பிறவும் பெறப்படும். ஆகலின், நாமனைவரும் இவ் வியாவகாரிகங்களையே உறுதிபயக்கு முண்மையென வுன்னிப் பெறற்கரும் வாணாளை வீணாளாக்காது, உயர்வொப்பற்ற பரம் பொருளாமுண்மையொன்றையே கடைப்பிடித்தொழுகி, இம் மக்கட் பிறவியாலாம் பயனாகியபேரின்பவாழ்வு பெற்றுய்யுமாறு எல்லாம் வல்ல இறைவன்திருவருளைப் பிரார்த்திக்கின்றாம்.

திருநீலகண்டர்.

---

உ

## கட்டுரைக்கோவை.

### உண்மை ஒழுக்கம்.

எப்பிறவிகளினும் உயர்ந்தது மக்கட் பிறவியே என்று பெரியோர் கூறுகின்றனர். பொதுவாகநோக்குவோமாயின், எல்லாவுயிர்களும் பிறக்கின்றன; தத்தம் பெண்டுபிள்ளைகளுடன் பிணைந்து வாழ்கின்றன; உயிர்வாழும்வரை வயிறார உணவை உட்கொள்ளுகின்றன; இறுதியில் இவ்வுலகை விட்டு இறந்தொழி கின்றன; இவற்றை நாம் நாள்தோறும் கண்கூடாகக் காண்கின் றோம். இங்ஙனமிருக்க, மக்கட்பிறவியை உயர்ந்தது என உரை ப்பது ஏன்? அதற்குக் காரணம் யாதேனும் இருத்தல் வேண்டு மன்றோ? ஆதலால் அக்காரணந்தான் யாதென ஆராய்வாம்.

பிறவுயிர்கள் மாட்டுக் காணப்படாத பகுத்தறிவென்னும் பண்பொன்று மக்களிடம் மன்னியிருக்கின்றது. அப்பகுத்தறிவே மக்களின் உயர்வுக்கு உற்ற காரணம். மக்களும், உணர்தற்கு ஒண்ணாத ஒருகாலத்தில் விலங்குகளைப்போலவும், பறவைகளைப்போலவும், காட்டிலும், மலையிலும், காலத்தைக் கடத்தியவர்களே. உடுக்க உடையில்லாமலும் உறைந்தார்கள். இருக்கத் தகுதியானஇடம் செய்துகொள்ள இயலாமலும் இருந்தார்கள். இயற்கையுணவைச் செயற்கையுணவாகச் செய்துகொள்ள இயலாமலும் வாழ்ந்தார்கள். இவை வரலாற்று நூல் வல்லுநர் யாவராலும் ஒப்புக்கொடை உண்மைக்கொள்கை. மேற்கூறியமற்றைய உயிர்களைப்போல இயற்கையாக வாழ்ந்தமக்கள், தங்கள் பகுத்தறிவினலே தற்காலம்உள்ள நாகரிகநிலையை அடைந்தனர். மக்கட்குரிய இப்பகுத்தறிவு இல்லாமையால், விலங்கு, பறவை முதலிய உயிர்கள்இன்னும் ஆண்டவன் ஆக்கிய இயல்பிலேயே அமைந்து வாழ்கின்றன.

மக்கள் தமக்குள்ள பகுத்தறிவினல் நல்லனவும் தீயனவும் நாடி, தீயனவற்றைவிலக்கி, நல்லனவற்றைக் கைக்கொண்டு நடத்தல்வேண்டும். அதுதான் நல்லொழுக்கமென்று கூறப்படும மக்களை உயர்ந்தோர் என்று கூறுதற்குக் காரணமும் அதுவேயாகும். அத்தகைய நல்லொழுக்கம் மக்களாய்ப்பிறந்த ஒவ்வொருவரிடத்தும் அமைந்திருத்தல் வேண்டும். இதனைக் கம்பரும்

தக்க இன்ன, தகாதன இன்ன,என்று
ஒக்க உன்னலர் ஆயின, உயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்நெறி
புக்கவேல்,அவ் விலங்கும்புத் தேளிரே.

என்றசெய்யுளால் வலியுறுத்துகின்றார்.

உலகத்தில் சில்லரை உயர்ந்தகுடியினர் என்று உரைக்கின்றோம். பலரைத்தாழ்ந்தகுடியினரென்று பகர்கின்றோம். அத்தகைய உயர்விற்கும், தாழ்விற்கும் காரணம் பிறப்பே எனச்சிலர்

பிறந்தவர். அதுபொருந்தாப்புல்லுரையாகும். பிறப்பினாலே யே உயர்வுதாழ்வு சிறிதும் இல்லை. இதனைப் "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்," என்னும் பொய்யாமொழியால் அறிகின் றேம். ஆயின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணந்தான் யாதெ னின், உயர்வுக்குக்காரணம் நல்லொழுக்கமும், தாழ்வுக்குக்கார ணம் தீயொழுக்கமுமே ஆகும். இவற்றை

ஒழுக்கம் உடமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

என்ற குறளால் அறிக. இனி உலகமக்கள் எதனை விரும்புகின்ற னர் என்றால், இன்பத்தையேவிரும்புகின்றனர். துன்பத்தை விரும்புவார் ஒருவரும்இலர். ஆதலால் இன்பத்தைவேண்டி நிற் கும் எல்லோரும் நல்லொழுக்கத்தை நாடவேண்டும். அந்நல் லொழுக்கமே அறத்திற்குக் காரணமாய் அமைந்து இம்மை, மறுமைஆகிய இருமையினும் இன்பத்தையளிக்கும். தீயொழு க்கமோ மறத்திற்குக் காரணமாம். இம்மை, மறுமை ஆகிய இரு மையினும் துன்பம்பயக்கும். இவற்றை

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

என்ற வள்ளுவர் வாய்மொழியால் உணர்க. இனி ஒழுக்கம் யாதென்பதைப்பற்றிச் சிறிது கூறுகின்றோம்.

ஒழுக்கம் எல்லோர்க்கும் பொதுவான பொருளேயாகும். உடலைப்பிணிவாய்ப்படாமல் பேணுதல், அழுக்கற்றஆடையணி தல், கடவுள் மாட்டுக்கருத்தைப்பதித்தல், அடியார் மாட்டு அன்பு செலுத்தல். உள்ளொன்றுவைத்துப் புறமொன்றுபுகலா மலிருத்தல், பிறவுயிர்க்குத் தீங்குபுரியாதிருத்தல், நல்லநூல்களைக் கற்றல், பிறர்க்குக்கற்பித்தல், ஈகை, முதலிய இவை போல்வன நல்லொழுக்கத்தின் பாற்படுவனவேயாம். இவை எல்லோரும் கையாளவேண்டியனவாகும்.

அன்றியும், எவரெவர் எந்தெந்தநிலையில் இருக்கின்றனரோ, அவரவர்கள் தத்தம்கடமையைச் செவ்வனே செய்தலும் நல்லொழுக்கமென்றே கவிலப்பெறும்.

அரசன், முறைவேண்டினர்க்கும், குறைவேண்டினர்க்கும், காண்டற்கு எளியனாகவும்; இன்சொல்லை இயம்புவோனாகவும்; சுற்றத்தாரையும், நண்பரையும், பகைவரையும், நொதுமலரையும், தக்காரையும், மெலியாரையும், ஒப்பநாடி முறை செய்து காப்பாற்றுகின்றவனாகவும்; வேண்டுவார்க்கு வேண்டுவதே, ஈகின்றவனாவும்; இன்னும் அரசற்குரிய அங்கங்கள் அனைத்தும் அமையப்பெற்றவனாகவும் இருத்தல்வேண்டும். இவையே அரசற்குரியநல்லொழுக்கமாகும்.

தவநெறியில் நிற்போர், அருள்சேர்ந்த நெஞ்சினராகவும் மன்னுயிர் அனைத்தையும் தன்னுயிர் எனக்கருதும்தன்மையாளராகவும், "அவிசொரிந்து ஆயிரம்வேட்டலின்ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமைநன்று" என்ற கொள்கையைக்கொண்டவராகவும், புத்தியைப்பொறிவழிபோகாது தன்வழிச்செலுத்துந்தாமுடையவராகவும், பிறர்பொருள் கவர்தல், உண்மைக்கு மாறாய் ஒழுகுதல், சினஞ்செய்தல் ஆயவற்றை அறவே அகற்றியவராகவும், இன்னாசெய்தார்க்கும் அவர் நாணுமாறு நன்னயம் செய்யும் நல்லோராகவும், மற்றும்தறவிக்குரிய தூயவொழுக்கங்களை ஆளுபவராகவும் இருத்தல்வேண்டும். இவையே துறவிகளுக்குரிய நல்லொழுக்கமாகும்.

பெண்மக்களுக்கு, மணமாவதற்கு முன்னர்த் தாய்தந்தையர் மொழியைத்தட்டாது நடத்தலும், மணமாய பின்னர், பிறதெய்வம் பேணாதவளாய்த் தன்தெய்வமாகிய கொழுநனைத்தொழுகின்றவளாகவும், துறந்தார்ப்பேணல், விருந்தயர்தல், வறியார் மாட்டும், அருளுடைமை முதலிய நற்றன்மைகளும், வாழ்க்கைக்குவேண்டும் பொருள்களையறிந்து கடைப்பிடித்தல், அட்டிற்றொழில் வன்மை, ஒப்புரவுசெய்தல் முதலிய நற்செயல்களும், கற்புநெறியினின்றும் வழுவாமல் தன்னைத் தானே காத்துக்கொள்ளுதலும். ஆகிய இவைபோல்வன நல்லொழுக்கமாகும்.

ஆசிரியராயிருப்பவர்கள்—தெளிந்த கல்வித்தேர்ச்சி, எல்லா உயிர்களிடத்தும் இரக்கம், எல்லாமக்களும் பிறப்பினால் ஒரு தன்மையர்என்னும் எண்ணம், தாய்மொழிப்பற்று, தாய்நாட்டுப்பற்று, கடவுள் நம்பிக்கை, வேற்றுமையைவிரும்பாமை, உண்மைப்பொருளை உலகினர்க்கு உரைத்துமக்களைச் சீர்திருத்துதல், முதலியபரந்த நோக்கங்களை உடையவராய் இருத்தல்வேண்டும். இவையே ஆசிரியர்க்குரிய நல்லொழுக்கமாகும்.

மாணவர்களுக்கு, தங்கள்பாடங்களை முற்றக்கற்றுத்தேறுதல், ஆசிரியர்க்கு அன்புண்டாகுமாறு நடந்துகொள்ளுதல், அன்னைதந்தையரை முன்னறிதெய்வமென்று அறிந்து அவர்மொழிப்படிநடத்தல் முதலியவைகள் நல்லொழுக்கமாகும். இங்ஙனமே ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றுதல்வேண்டும். யாவரும்,

“ஆன்றோர் கடிந்த மறச்செயல் அனைத்தையும்
அறவே நீக்கி அன்னவர் நன்றென
அறிந்துரை தந்த அறச்செயல் தம்முள்
தம்மா லியன்ற தகைமாண் செயல்களைச்
செய்தலே சிறந்த ஒழுக்கமென் றாமே”

என்ற கொள்கையைக்கைப்பற்றக் கடமைப்பட்டிருக்கின்றனர். சிலர்வேடத்தில்நல்லொழுக்கம் உடையவர்போல நடிப்பர். அன்னவரைநல்லொழுக்கம் உடையவரென்றுநம்புதல் நன்றன்று. சிலர் வேடத்தினால் நல்லொழுக்கம் உடையவர் அல்லாதவர்போலக் சாணப்படலாம், ஆனால் அவருள்ளம் களங்கமற்றதாயும், அருள் நிறைந்ததாயும், பிறர்க்கொருதீங்குங்கருதாப் பெற்றியுடையதாயும் இருந்தால், அவரை எவ்வாறு கூறுவது? ஒழுக்கமுடையவரென்று உரைத்தற்கு உரியவரன்றோ? இவ்வுண்மைநல்லொழுக்கத்தினைக் கீழ்வரும் குறட்பாவால் அறிந்துகொள்க.

மனத்துக்கண் மாசில னாத லனைத்தறன்
ஆகுல நீர பிற.

சா. சிதம்பரன்.

உ

# தமிழ்மொழியும் தமிழ்மக்களுயர்வும்.

(56-ம் பக்கம் தொடர்ச்சி)

(56-ம் பக்கம் தொடர்ச்சி)

## தமிழ் ஆரியத்தினின்று பிறந்ததாமோ ?

நாடகம் என்னுஞ் சொல்லை வடமொழிச் சொல்லென்று கூறுவதே போன்று இன்னும் பல தமிழ்ச் சொற்களையும் வடமொழியினின்றுபோந்தன வெனக்கூறற்குப்பலர் துணிகின்றனர். அன்றியும், தமிழ் மொழியே வடமொழியினின்றும், போந்ததெனவும் சிலர் கூறுவர். இவர் கூற்றினை ஒருவாறு ஆராய்வது நமது கடனாகும். வடமொழியிலிருந்து தமிழ் போந்ததெனக் கட்டுரை வரையும் சில ஆராய்ச்சியாளர் தமது கொள்கையை நிலைநாட்ட எடுத்துக்காட்டு மாதரவுகள்—தற்போது தமிழிற் பயிலும் சில வடமொழிச் சொற்களேயாம். இவர் தமிழ்ச் சொற்கள் சில ஆரியத்திற் பயிலுவதற் கென்மொழிவரோ அறியேம். ஆணி, அடவி, கடு, கலா, குடி, குண்டம், கூனி, குளம், கோட்டை, சவம், சாயா, பட்டினம், பாகம், மீனம், வளையம், முகம் முதலிய தமிழ்ச்சொற்கள் வடமொழியிற்போய்ப் பயில்கின்றன. தற்போது ஆரியச் சொற்களே தமிழில் மிக்கு வழங்குகின்றன, அதுபோல் தமிழ்ச் சொற்கள் ஆரியத்தில் மிக்கு வழங்கவில்லையே யெனின், ஆரியம் வழக்கொழிந்து நிற்கின்றமையான் என்க. என்னை? உலக வழக்கிலிருக்கும் இரண்டு மொழியாளர் நெருங்கிப்பழகினன்றோ ஒரு மொழியின் சொல் மற்றொன்றிற் புகுவதுண்டாம். பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வடமொழி வழக்கிறந்து பட்டமையான், தமிழ்ச் சொற்கள் பல அதிற் புகுவதற்குப் பொருட்டின்றாயிற்று. மொழிநூற் பயிற்சி சிறிதுமில்லாதாரே ஆரியத்தினின்று தமிழ் பிறந்ததெனக்கூறுவர். பண்டைத்தமிழ் நூற்களில் ஆரியச்சொல் மிகவும் அருகிக்கிடப்பதையும், தற்போது ஆரியச்சொல் ஒன்றேனுமின்றிப் பெரியார்

பலர் நூலெழுதுவதையுங் கண்டாரவரே தமிழ் ஆரியத்தினின்று போந்ததென்பர்? தமிழிற் பிறந்த பலமொழிகள் வடமொழி சிறிதுங் கலவாது பயில்வதையும், தமிழ் இலக்கணம் வடமொழி இலக்கணத்திற்குப் பல வழிகளில் மாறுபட்டிருப்பதையும் இக்கொள்கையினர் உணரார்போலும். எ, ஒக்களும், ழ, ற, னக்களும் வடமொழியிற் காணப்படவில்லையே. அன்றியும் ஒரு மொழி மற்றொரு மொழியுடன் ஒப்புமையுடையதென்பதனை யுணர்வதற் குதவியாயிருக்கும் பல வழிகளானுமாராயின், தமிழுக்கும் ஆரியத்திற்கும் ஒரு சிறிது முறவில்லை என்பது பெறப்படுகின்றது. ஒரு மொழி மற்றொரு மொழியினின்று பிறந்ததெனக் கூறுமுன்னர், அம்மொழிகளில் முந்தியது இதுவென உறுதியாக அறுதியிடுதல்வேண்டும். அறுதியிட்ட பின்னர் அவ்விரண்டிற்கும் ஒற்றுமையுளதோ இன்றோ என்பதனைத் தேர்தல் வேண்டும். தேர்ந்தபின் ஒற்றுமையுளதாயின், அது ஒன்றற்கொன்று நெருங்கிப்பழகினமையினுண்டானதோ, அன்றி ஒன்று மற்றொன்றினின்று பிறந்ததனா லுண்டானதோ என்று ஆராய்தல் வேண்டும். இவ்வாறு ஆராயின், தமிழ் ஆரியத்தினின்று பிறந்ததென்னுங் கொள்கை வளியிற் பஞ்செனப் பறந்துபோம். ஆரிய முண்டாவதற்குப் பல்லூழிகள் முன்னரே தமிழ் உண்டாயது. அதனைப் பின்னர்க் கூறுதும். நான், நாம், நீ, நீர் முதலிய இடப்பெயர்களும், அம்மை, அப்பன், அக்கை, தங்கை, தம்பி, அண்ணன் முதலிய முறைப்பெயர்களும், ஒன்று, இரண்டு, மூன்று முதலிய எண்ணுப்பெயர்களும், கை, கால், கண், காது, மூக்கு முதலிய உறுப்புப் பெயர்களும், தமிழுக்கும் ஆரியத்திற்கும் சிறிதும் உறவில்லையென்பதனை உறுதிப்படுத்துகின்றன.

## பொதுச் சிறப்பு.

இதுகாறும் யாம் தமிழைப்பற்றிப் பலர் கொண்ட கொள்கைகளை எடுத்துக்காட்டி ஆராய்ந்தோம். தமிழ் மொழியின் சிறப்பியல்புகளை உணர்ந்தாரவரே அது பிறிதொரு மொழியினின்று முண்டாயதென வுரைத்தல் கூடும்? புவியில் பழமையும்,

பெருமையும் வாய்ந்த மொழிகளுள் தமிழுக்கிணையான மொழியை யாம் கண்டிலம். பேச்சு வழக்கினும் நூல் வழக்கினும் பயின்று வருவதும், எக்காலத்து மக்களும் பயிலுதற்கேற்ற ஆற்றலமைந்ததும் தமிழொன்றேயாகும். அது எப்பொழுதுண்டாயதென்று யாவராலு மறிய வாராமையின், படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டு வருவதொன்று எனக்கூறும்படி யிருக்கிறது. அத்துணை நீண்ட காலமாகியும் அது தன்னெழில் சிதையாது, நடைதளராது இன்னமுங் கன்னியென மிளிர்கின்றது. தமிழ் எழுத்தொலியெல்லாம் கற்றுவல்லாரும் அல்லாரும் ஒருபடியே கூறத்தக்க மென்மையுடையன. சொற்களெல்லாம் பெரும்பாலும் இரண்டு மூன்று எழுத்துக்களாலாகியவை. சொற்களின் சந்திகள் இயற்கையை ஒட்டி ஏற்பட்டுள்ளன. எல்லாப் பெயர்களும் ஒரு தன்மையாகவே வேற்றுமை உருபேற்றுத் திரிபின்றி நிற்கும் எண்மையுடைய வாதலால், பேசுதற்கென எவரும் வேற்றுமையிலக்கணம் கற்க வேண்டுவதின்று. எல்லா வெழுத்தும் இயற்கையிற் பிறப்பனவாதலால், அதற்கேற்றவாறு உயிரென்றும் மெய்யென்றும், உயிர்மெய் யென்றும் பெயர் பெற்றிருப்பதும், வலி, மெலி, இடை யென மெய் மூன்றினமாக அமைந்திருப்பதும் வியப்பு விளைப்பனவாம். பகுத்தறிவுள்ள மக்கள் முதலிய உயிரை உயர்திணை யென்றும், பகுத்தறிவில்லாத உயிரையும் உயிரில் பொருளையும் அஃறிணையென்றும் அறிவுபற்றி வேற்றுமை செய்தது தமிழ் இலக்கணமேயாகும். சொல்நோக்கி ஆணைப் பெண்ணாகவும்; பெண்ணை ஆணாகவும், இரண்டையு மலியாகவும் பிறழக் கூறுமாறின்றிப் பொருள்நோக்கத்தாலே இம்மொழியில் பால் வகுக்கப்பெற்றிருக்கிறது. இதிலுள்ள வினைச் சொற்களெல்லாம், திணை, பால், இடம், காலம் என்பவற்றை ஒருங்கே யுணர்த்துவதுபோல் வேறு எம்மொழிச் சொற்களும் உணர்த்தவில்லை. அன்றியும், மக்கள் அடைதற்பாலனவாகிய பொருளையெல்லாம் அகம், புறம் எனப்பகுத்து, அவற்றுக்குரிய ஒழுகலாற்றினை இலக்கணத்தால் வரையறை செய்வது இம்மொழிக்கே யுரிய சிறப்பியல்பாகும்.

## நூற்சிறப்பு.

இவ்வாறெல்லா முள்ள தமிழ்ச் சிறப்பினையுணராது அது பிறிதொரு மொழியினின்று போந்ததென்பரேல், அந்தோ! அறியாமையினுமறியாமை! தமிழ் நூற்கள் ஒருசிறிதென்பர் தோல்காப்பியம் ஒன்றின் பரப்பையுமுணரார். உரைநடை இலதென்பார் சிலப்பு நூலையும், உரையாசிரியர்கள் உரைகளையும் உணராதார். தமிழின் கரைகாணுதற்கரிய பரப்பைப்பார்த்து,

> "கடல்குடித்த குடமுனியுன் கரைகாணக் குருநாடில்
> தொடுகடலை யுனக்குவமை சொல்லுவதும் புகழாமே"

என்றும், அதன் இலக்கண வரையறைச் சிறப்புநோக்கி,

> "ஒருபிழைக்கா அரனார்முன் னுரையிழந்து விழிப்பாரேல்
> அரியதுன திலக்கணமென் றறைவதுமற் புகமாமே"

என்றும், தமிழ்ப்புலவர்கள் இயற்கை யுண்மையினை உள்ளவாறு விளக்கிப் பாடியிருத்தலைக் குறித்து,

> "பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ
> எத்துணையும் பொருட்கிசையு மிலக்கணமில் கற்பனையே"

என்றும், தமிழ் நீதியைக் குறித்து,

> "வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்
> உள்ளுவரோ மநுவாதி யொருகுலத்துக் கொருநீதி" [கள்

என்றும், தமிழ் நூற்கள் மனதையுருக்குந் தன்மையினை நினைத்து

> "மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தின் மாண் [டோர்கள்
> கனஞ்சடையென் றருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ"

என்றும் கூறிய இன்னிசைச் செய்யுளை உணராதார் யாவர்.

தமிழ்ப் புலவர் உயர்ந்த கருத்துக்களை உயர்ந்த செய்யுணடையிற் சிறந்த வுவமைகளைக் கொண்டு கூறினர். புவியில் ஒப்புயர்வற்ற புலவர் சிலரேயாவர். கிரேக்கரில் கோமரும்(Homer) உரோமர்களில் வற்சீலநும் (Virgil) ஆங்கிலேயரில் சேகப்பிரியர் (Shakespeare) மிலிதன் (Milton) என்பாரும், பிரெஞ்

சுக்காரரில் மேலியார் (Moliere) என்பாரும், செருமானியரில் கீழே (Goethe) என்பாரும், வடமொழியாளரில் காளிதாசன், வான்மீகி என்பாரும் பெரும் புலவர்களாவார். இவர்களோடு ஒப்ப எண்ணுதற்குரிய தமிழ்ப் புலவர் இளங்கோவடிகள், சாத்தனார், திருத்தக்க தேவர், கம்பநாடர், சேக்கிழார் முதலியோர் பலராவர். தொல்காப்பியர், திருவள்ளுவர், தேவாரம் திருவாசகம் முதலிய கூறிய அடியார், இவர்களுக்கிணையான புலவர் எந்நாட்டினுமிலராவர். கபிலர், நக்கீரர் முதலாயினோர் பெருந்தொடர்நிலைச் செய்யுள் இயற்றினரலராதலால் அவர்களை இளங்கோவடிகள் முதலாயினரோடு எண்ணுதற்கு யாம் ஒப்பவில்லை. ஏனினும் இவர்கள் இயற்கையினை பொட்டிப் பாடியிருப்பதுபோல் இளங்கோவடிகள் முதலாயினர் பாடினரில்லை. தமிழில் உள்ள தொடர்நிலைச் செய்யுட்கள் எல்லாவற்றினையும்பற்றி விரிவாகக் கூறுதல் இக்கட்டுரைக்குப் பொருந்தாமையின் அச்செய்யுட்களினின்றும் சில எடுத்துக்காட்டுதல் அளவில் அமைவாம்.

புதுவதாக மணந்து மகிழ்ச்சியிலாழ்ந்திருக்கும் கோவலன் தனது தலைவியைநோக்கி,

> "மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
> காசறு விரையே! கரும்பே தேனே!
> அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
> பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!"

எனப்புகழ்ந்து நிற்கின்றனன். செய்யுணடையினும் பொருட்பொலிவினும் இவ்வடிகள் இணையற்று விளங்குகின்றன. பொன்னே, முத்தே என்று விளிப்பது இயல்பேயாயினும், கோவலனது இன்பத்திற்கு இவ்வுவமைகளே சாலப் பொருந்துவனவாம். பொன் கண்ணிற்கும், முத்துத் தொடுதலுணர்ச்சிக்கும், விரை மூக்கிற்கும், கரும்பு நாவிற்கும், தேன் (யாழ்) காதிற்கும் இன்பத்தைத் தருவனவாதலால், கோவலன் தனது தலைவியின்பால் ஐம்புலனாலும் நுகரப்படும் இன்பத்தைக்கண்டு உலப்பில் மகிழ்ச்சியிற்கலந் துளமகிழ் சிறந்தனன் என்பதைப் புலவர் பெருந்தகையார் கூறியிருக்குஞ் சிறப்பினை மறப்பதரிது!

கண்ணகியினாற் சிலம்பினுண்மையறிந்த நெடுஞ்செழியனும் கோப்பெருந்தேவியும் மயங்கிவீழ்ந்த தன்மையை இளங்கோவடிகள் இவ்வாறு கூறுகின்றார்:—

“யானோ வரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவ
லென்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தன ளடுங்கிக்
கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்
றிணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி”.

‘குலைந்தனள்’ என்ற ஒரு சொல்லாற் கோப்பெருந்தேவியின் மனம் மாப்பெருந்துயருற்றுக், கோடியெண்ணம் விநாடியில் நினைந்து நைந்ததெவல் கொள்ளக்கிடக்கின்றது. தேவி அவ்வமயத்து நலங்குலைந்தனளோ, இலங்குலைந்தனளோ, மனங்குலைந்தனளோ எணங்குலைந்தனளோ யாதென வுரைப்பாம்? ‘கணவனையிழந்தோர்க்குக் காட்டுவதில்’ என்றமையான், தந்தை தாய் முதலாயினோரை யிழந்தோர்க்கு, அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டுவதுபோல், தலைவரை யிழந்தோர்க்குக் காட்டுதல் அமையாமையைப் புலவர் பெருந்தகையார் சுருங்க வுரைத்திருக்குந் திறனை எவ்வாறு புகழ்தல் அமையும்? அன்றியும் இது தலைவனையிழந்து நிற்கின்றாளை நோக்கித் தலைவனையிழந்தாள் கூறுங் கூற்றாகையின் அதனை நுண்ணறிவினர் ஆழ்ந்தெண்ணினராயின் நயங்கள் பல புலப்படக் காணலாகும்.

புலவர் பெருமக்கள் பணியு மணிமேகலையாசிரியர் மரம் நெருங்கி இருள் மிகுந்த அடவிதனை இவ்வாறு சொல்லிச் செல்கின்றனர்:—

“பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்
கிருள்வலை வுண்ட மருள்படு பூம்பொழிற்
குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டின நல்லியாழ் செய்ய
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்
மயிலா டரங்கின் மந்திகாண் பனகாண்”

இவ்வடிகளில் உருவகத்தால் ஒரு போர் நிகழ்ச்சியும், இசைவல்லோர் குழுவும், நாடகமுங் குறிக்கப்பட்டிருத்தல் காண்க. மர நெருக்கத்தால் இருள்மிக்கிருக்குந் தன்மையினை, ஞாயிற்றின் கதிர்த்தானைக்குப் புறங்காட்டி வனத்தில் அடைமதிற்பட்ட இருளெனக் கூறினர். 'மயிலாடரங்கின்' என்றதோடமையாது 'மந்திகாண்பனகாண்' என்றமையான் பாட்டின் நயம் மிகவுஞ் சிறந்து விளங்குகின்றதன்றோ?

மயிற்பொறியிற் சென்று இடுகாட்டில் வீழ்ந்தலமரும் விசையையினது தன்மையை திருத்தக்கதேவர் இவ்வாறு கூறுகின்றார்:—

“உன்னென வுரையிற் கேட்பா ருயிருறு பாவ மெல்லாங்
கண்டினித் தெளிக வென்று காட்டுவாள் போல வாகி
விண்டொட நிவந்த கோயில் விண்ணவர் மகளிற் சென்றாள்
வெண்டலை பயின்ற காட்டுள் விளங்கிழை தமிய ளானாள்”

எனைத்தானும் நினைத்தற்கரிய கொடியதொரு இடுக்கணிற்றுன்புறும் நிலைமையினை இவ்வகையினல்லது புலவர் பெருந்தகை எவ்வகையினியம்புதல் சாலும்? தேவமாதுபோல வாழ்ந்த விசையை இப்பொழுது உலகத்தினுயிர்களெல்லாம் அடையும் பாவமெல்லாம் இதுதான் பாருங்கள் எனக்காட்டுவாள்போல இடுகாட்டில் விளங்கினளாம்.

சீதையைப் பணிப்பெண்கள் அலங்கரிக்குந் தன்மையினை
'உமிழ்சுடர்க் கலன்க ணங்கை யழகினை மறைப்ப தோரார்'
என்றும், சீதையின் கழுத்தணியைக் குறித்து—
“மின்னணி நோக்கி னார்தம் மங்கலக் கழுத்துக் கெல்லாந்
தானணி யான போது தனக்கணி யாது மாதோ”

என்றும், கவி மன்னர்க்குமன்னராய கம்பநாடர் கூறுகின்றார். சீதையின் செய்ய நிறத்தால் வெண்முத்தம் சிவந்து தோன்றுவதற் குவமையாக,

'செய்யரைச் சேர்ந்துளாருஞ் செய்யராய்த் திகழ்வ ரன்றே'

என்றும், இராமனது அம்பு தாடகையினுடல்புக்கு வெளிப்போந்த தன்மைக் குவமையாக,

"கல்லாப்-புல்லர்க்கு நல்லோர்சொன்ன பொருளெனப் போயிற் றன்றே" என்றும் அதே யம்பு இராவணனது உடலைத் துளைத்த தன்மையினை,

"வெள்ளெருக்கஞ் சடை முடியான் வெற்பெடுத்த
[திருமேனி மேலுங் கீழும்
எள்ளிருக்கு மிடனின்றி யுயிரிருக்கு மிடனுடி யிழைத்த
[வாறே
கள்ளிருக்கு மலர்க்கூந்தற் சானகியை மனச்சிறையிற்
[கரந்த காதல்
உள்ளிருக்கு மெனக்கருதி யுடல்புகுந்து தடவியதோ
வொருவன் வாளி"

என்றும் கம்பநாடர் கூறிச் செல்கின்றனர். பின்னும் இராமனிடமிருந்து பெற்ற வில்லைசயை விசுவாமித்திரன் இராமனுக்குத் திருப்பிக் கொடுக்குந்தன்மைக்கு,

"பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம் போய்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்".

எனக் கடலிற் பிறந்து கடலிற் கலக்கு மாரியை உவமையாகக் கூறினர்.

தொடர்நிலைச் செய்யுள்களிபற்றாத ஏனைத் தமிழ்ப்புலவர்களில் இயற்கையுண்மையினை உள்ளவாறு எடுத்துக்காட்டிச் சிற சிற செய்யுட்களியற்றியோர் எண்ணிறந்தோராவர். இவர்களிற் றலைசிறந்து விளங்குபவர் கணக்காயனர் மகனர் நக்கீரனும் குறிஞ்சிப்பாட்டு முதலிய பாடிய கபிலருமாவர். கூதிர்க்காலத்தை நெடுநல்வாடையில் இவ்வாறு தெரிவிக்கின்றார்.

"மாமேயன் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழிய"

விசும்பிற்பறக்கும் புள்ளினம் கூதிர்க்காலத்து, சிறகுகளை மடக்கிக் கீழ் விழுவதையும், கிரை பால் கொடாதொழிதலையுங் கண்டன்றே புலவர் இவ்வாறு கூறியிருக்கின்றார். கபிலர் பாடிய

குறிஞ்சிப்பாட்டு மிகுந்த சிறப்புற்று விளங்குவது. மலையும், மலைவீழ் அருவியும், அருவிசேர்ந்த நீர்நிலையும், நீரைக்குடைந்து விளையாடுந்தலைவி, தோழி இவர்கள் பூக்களைப் பறித்தணிதலும், பூக்களின் வகையும், தலைவன் தோன்றலும், பிறவும் இயற்கையை யொட்டி இப்பாட்டிற் கூறப்பட்டிருக்கின்றன.

பொருளுணர்ச்சிக்கு உவமை இன்றியமையாததேனும், அவ்வுவமையை இயற்கையழகு பிறழாது எடுத்தோதலும், உயர்ந்த கருத்துக்களைப் பொருத்திக் காட்டலும், வேண்டுழி உள்ளுறை அருமையாக அமைத்துக் கூறலும் பண்டைப் புலவர்க்கே அமைந்திருந்த அருங்குணங்களாம். தலைவி கூற்றாக ஒரு புலவர் இவ்வாறு கூறுகின்றார்:—

"அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தேன்மயக்கு பாலினு மினிய அவர்நாட்
டுவலைக் கூவற் கீழ
மானுண் டெஞ்சிய கலிழி நீரே"

இயற்கை வனப்பினைக்காட்டிச் சிறந்ததோர் பொருளைக் கூறுவதில் இவ்வடிகளினுஞ் சிறந்தனவற்றைக் காணுதல் மிகவும் அருமையாகும். இதனைப் படித்த நாம் முதலில் ஒரு வனத்தினை நினைத்தல்வேண்டும். பின்னர் அவ்வனத்தில் குழியொன்றில் இலைதழைகளால் மூடுண்டு நிற்கும் நீரினை நினைத்தல்வேண்டும். அதன் பின்னர் அத்தண்ணீர் மான் முதலிய விலங்குகள் குடித்துக் கலக்கியதென வுணர்தல் வேண்டும். தோட்டத்துத் தேனையும் பாலையுங் கலந்தால் எத்துணை இனிமை பொருந்தியிருக்கு மென்பதனையுந்தேர்தல் வேண்டும். இத்தேன்பாலினும் மானருந்திக் கலக்கிய குழிநீர் இனியதெனத் தலைவி கூறுவாளானால், அத்தலைவிக்குத் தனது தலைவன்பாலுள்ள அன்பு எத்தகைத்தாம்! சங்கப்புலவர் காட்டிய உவமைகள் எத்தகைய! தாழைமுள்ளுக்கு அணிற்பல்லை உவமித்தார் ஒரு புலவர். நண்டின்

கண்ணை வேப்பம்பூவினரும்பு போன்றதென்றனர் ஒருவர். விளா மரத்தின் பட்டைக்கு உடும்பின்தோலை உவமையாகக் கூறினர் ஒருவர். தினைக்கதிர் மடிக்கும் பன்றியினைப் பொன்னும் பொன்னுரை கல்லும் போன்ற தென்றனர் ஒருவர். மற்றொருவர் தினைதின்று பருத்துத் தோன்றும் மந்தியினைப் 'பண்ட வாணிகன் பை' என்றனர். பிரிந்து சென்ற தலைவன் எவ்வூரனென்று தோழிவினவலும், தலைவி

"தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளை தின்னு முதலைத் தவனூர்"

என்று தலைவனது நன்றியின்மையை உள்ளுறையாக எடுத்துக் காட்டினள்.

---

## தமிழ் மக்கள் உயர்வு.

---

### தமிழ் நாட்டின் தோன்மை.

இதுகாறும் நாம் தமிழைப்பற்றி ஒருவாறு ஆராய்ந்தோம். இனித் தமிழ்மக்களைப்பற்றிக் கூறுவோம். தமிழ்மக்கள் தொன்று தொட்டு வந்த பழங்குடியினர் என்பது பலரது கொள்கையாகும். தமிழர் யாவர் என வாராயப் புகுந்த பலரும் அவர் யாண்டிருந்து வந்தவர் என்னுங்கடாவை எழுப்பிப் பல கொள்கைகளை நிலைநிறுத்தியிருக்கின்றனர். தமிழ்மக்கள் இந்திய நாட்டிலேயே வதிந்த ஒரு வகுப்பார் என்பது ஒரு கொள்கையாகும். திராவிடர் என்ற ஒரு வகுப்பார் வடமேற்குப் பாகத்திலிருந்து இந்நாட்டிற்கு வந்தவர் என்பது காலடுவேலருடைய கொள்கையாகும். காலஞ்சென்ற திருவாளர் கனகசபைப்பிள்ளையவர்கள் தமிழர் மங்கோலியாவிலிருந்து இந்திய நாட்டிற்குப் போந்தனர்என்பர். பாபிலோனியாவிலிருந்து போந்தவர்என்பது மற்றொரு கொள்கையாகும். செருமானிய விற்பனர் 'கெக்கேல்' (Hackel) என்பார் 'லெமூரியா' என்ற நிலப்பரப்பு இந்தியாவின்

தெற்கேயிருந்த தென்றும், அது இப்போதுள்ள அத்திரேலியா, மடகாக்கர், தென்னிந்தியா முதலிய நிலப்பகுதிகளைத் தன்னகத்தே கொண்டிருந்ததென்றும், ஆண்டுத்தான் மக்கள் முதன் முதலிற் றோன்றியிருத்தல் வேண்டுமென்றும், அந்த நிலப்பரப்புப் பின்னர் கடலுள் ஆழ்ந்து விட்டதென்றுங் கூறுவர். இக்கொள்கையினைத் திருவாளர் 'நாயக்கர்' அவர்கள் பல சான்றுகளைக்கொண்டு உறுதிப்படுத்துகின்றனர். இக்கொள்கை மிகவும் வலுவான தொன்றாகும். ஆக்கிரேலியா முதலான இடங்களில் வசிக்கும் பழங்குடியினர் பேசுமொழி தமிழுக் கொப்புமை யுடையதாயிருக்கின்றது. இறையனார் அகப்பொருளுரையும், "பஃறுளி யாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள" எனச் சிலப்பதிகாரத்துக் காணப்படும் அடிகளும் பண்டைக்காலத்தே தமிழகத்துக் கடல்கோள் நிகழ்ந்ததென்றவுண்மையை நிலைநிறுத்துகின்றன. அன்றியும், குமரியாறும், பேராறும், பஃறுளியாறும் முதலிய யாறுகளும், குமரிக்கோடு, மணிமலை முதலிய மலைகளும், காடுகளும், எழுநூற்றுக்காவத வழியுள்ள நாற்பத்தொன்பது தமிழ் நாடுகளும் இப்பொழுதுள்ள தமிழ் நாட்டின் தெற்கேயிருந்த செய்தி பண்டைத் தமிழ்நூற்களால் அறியப்படுகின்றது. நிலத்தின் அளவைக் கூறுமிடத்து அதன் பரப்பையே யுணர்த்துதல் முறையாதலால், ஈண்டு எழுநூற்றுக்காவதம் என்று கூறியது கடலிலாழ்ந்த தென்றமிழ் நாட்டின் பரப்பை யென்றே கொள்ளவேண்டும். 'பழங்குடி' என்பதற்குப் பரிமேலழகர் கூறிய, 'தொன்று தொட்டு வருதல்-சேர சோழ பாண்டியரென்றாற் போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டுவருதல்' என்ற பொருள் தமிழ் மூவேந்தரான சேர சோழ பாண்டியருடைய பழமையை நன்குணர்த்துகின்றது.

தமிழ்ச் சங்கங்கள் நடந்தன வென்பது ஒரு போலிக் கொள்கையாகும் எனச் சிலர் வாதாடுகின்றனர். இவர் ஒரு மக்களின் வரலாற்றை யுணர்வதற்கு அம்மக்களின் முன்னோரியற்றிய நூற்

களை சிறந்த ஆதாரவுகள் என வுணராது சில வட்டெழுத்துக் களிலேயே தமது முழுநம்பிக்கையையும் வைத்துச் சில போலி வரலாறுகளை எழுதிச்செருக்கித் தருக்கித் திரியும் வரலாற்று சிரியராவர். முச்சங்கங்களில் இயற்றப்பட்ட நூற்களும், நூற் செய்யுள்களும் இப்பொழுது வெளிவந்துலாவுகின்றனவே கடைச்சங்கத் தலைமை வீற்றிருந்த 'நக்கீரனாரே' முச்சங்க நிகழ்ச்சி கூறினாரென்றால் அவருக்கு ஏறக்குறைய இரண்டா யிரம் யாண்டு பிற்காலத்தவராகிய நாம் அதனை எவ்வாறு மறுக்க வியலும் ?

வரலாற்றாராய்ச்சிக் கெட்டியவரையில் தமிழ் மக்கள் மூவா யிரம் யாண்டுகளுக்கு முன்னரே இத்தமிழ் நாட்டிலேயே இருந் தவரென்பது வெளிப்படுகின்றது. கிரித்தவர் பைபிள் நூலின்படி கி. மு. பத்தாம் நூற்றாண்டில் (1000 B. C.) அரசு செலுத்திய 'சாலமொன்' அரசனுடைய மரக்கலங்களில் தோகையும், அரிசி யும், பிறபொருள்களும் தமிழ் நாட்டிலிருந்து அவர் நாட்டிற் குக்கொண்டுபோகப்பட்ட செய்தி குறிக்கப்படுகின்றது. தோகை, அரிசி முதலிய தமிழ்ப் பெயர்களும் அந்நாட்டு மொழிகளில் சிறிது மருவி வழங்கியிருக்கின்றன. அந்நாட்டில் ஓடும் நீல நதிக்குக் காவேரி என்ற ஒரு பெயரும் இருந்ததெனல் தெரிகின் றது. கி. மு. எட்டாவது நூற்றாண்டில் விளங்கிய 'கோமர்' (Homer) என்ற புலவர் பெருந்தகையாரும் 'இலியடு' என்ற தமது நூலில் பாண்டி நாட்டின் பித்தளை வேலைப்பாடுகளை வியந் திருக்கின்றார். கி. பி. முதலாம் நூற்றாண்டில் அரசு செலுத்திய ஆகச்டச் (Augustus) என்னும் உரோமபுரி அரசனும் பாண்டி மன்னனுக்குச் செய்திகள் அனுப்பியதுதெரிகின்றது. இத்தகைய சான்றுகளால் தமிழ்நாடு மிகப் பழங்காலத்தது என் னுங் கொள்கை உறுதிப்படுகின்றது.

## தமிழர் நாகரிகம்.

மேலே எடுத்துக்காட்டப்பெற்ற சில மேற்கோள்களினால் தமிழ் மக்களுடைய தொன்மை வெளிப்படுவதுடன் அப்பழங்

காலத்தேயே தமிழ்மக்கள் வணிகத்தில் மிகச் சிறப்புற்றிருந்தனர் என்பதும் வெளிப்படுகின்றது. வணிகத்திற்கின்றியமையாத மரக்கலங்களும், கலங்கரை விளக்கங்களும், சிறந்த துறைமுகங்களும் அக்காலத்திலிருந்தன வென்பதும் தமிழ் நூற்களால் தெரியவருகின்றன.

"சிறு தோட்கோத்த செவ்வரிப் பறையின்
கண்ணகத் தெழுதிய குறியே போல"

என்னுந் தொல்காப்பிய எடுத்துக் காட்டுச் செய்யுளால், வணிக அடையாளம் (Trade mark) இடும் வழக்கம் அக்காலத்துத் தமிழரிடத்து இருந்தமையை உணரலாகும். பாலாடை பரந்தன்ன நூலாடை அக்காலத்துத் தமிழ் நாட்டில் நெய்யப்பட்டது. தமிழ் நாட்டின் முத்தொன்றே அக்காலத்து மேனாட்டார்களின் பொருளைக் கொள்ளைகொண்டதாகச் சொல்லப்படுமாயின், தமிழர் வணிகத்திறனுக்கு வேறென்ன மேற்கோள் வேண்டும்? இதனாலேயே முத்தின் வனப்பைக் கோமர், வற்சிலர் முதலிய புலவர்களும், அவர்களுக்குப் பின்னர்வந்த இத்தாலியப் புலவர்களும், செகப்பிரியர், மில்டன் போன்ற புலவர்களும் சிறக்கக் கூறியிருக்கின்றனர். முத்திற்கு அடைமொழியாகக் கிழக்கென்றும் வெள்ளிதென்றும் பொருள்படும் ஓரியண்டு (Orient) என்னுஞ் சொல்லை இப்புலவர்கள் எல்லோரும் உபயோகப்படுத்தியிருக்கின்றனர். வணிகத்திற் போலவே வேளாண்மையினும், தொழிலினும் தமிழ் மக்கள் சிறந்திருந்தார்களென்பதும், உடற்கூற்று நூல், செடி கொடி நூல், பொருணூல் முதலியவற்றில் அவர்கள் வல்லுநராயிருந்தா ரென்பதும் தமிழ் நூற்களினாலறியக் கிடக்கின்றன.

இக்காலத்து நாகரிகம் 'திரைகடலோடியுந் திரவியந்தேடு' என்ற ஒரு கொள்கையினை மாத்திரம் உறுதியாய்ப் பிடித்து நிற்கின்றது. பண்டைத் தமிழரின் நாகரிகம் அதனுடன் நின்றுவிடவில்லை. தமிழர் நீதியும், அவர் கொடைத்திறமும், வீரமும் பெருந்தன்மையும், தமிழ் மகளிர்கற்பும் எக்காலத்தும் எவ்வகுப்பாரிடத்துங் காணுதலரிதாகும். நாகரிகம் என்ற சொல்லைத்

திருவள்ளுவர் கண்ணோட்டம் என்ற பொருளில் உபயோகப் படுத்தியிருக்கின்றன ரென்றால், அதனைப்பற்றித் தமிழ்மக்கள் கொண்ட கொள்கை எத்தகைத்தாம்! தமிழ் மன்னரைவிடக் கண்ணோட்டமுள்ள மன்னர் வேறுநாட்டில் இருந்தார்களெனக் கொள்ளுவதற்கு ஆதாரங்கள் இல்லை.

> "யானோ வரசன்? யானே கள்வன்
> மன்பதை காக்குந் தென்புலங் காவ
> லென்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுள்"

என்றுரைத்த 'நெடுஞ்செழிய'னிலும் நீதிமன்னரைப் பிறநாட்டிற் காணலாகுமோ?

## கொடைத்திறம்.

"கொடுக்கி லாதானைப் பாரி யேயென்று கூறினுங்கொடுப் பாரிலை" என வள்ளன்மைக்கே ஒரு எல்லையாகக் கூறப்பட்ட பாரியைப் போன்ற ஒரு வள்ளலையும்,

> "இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
> அறவிலை வாணிக னாஅ யல்லன்"

என்றவாறு நன்றி யெதிர்பாராக் கொடையாளுயர்த்த ஒரு வள்ளலையும், "ஈத்திரங்கான்" என்று ஒரு புலவர் கூறியவாறு கொடுப்பதனாலுண்டாகக்கூடும் ஒரு சிறிய மனவுவகையையும் எதிர்பாராது கொடுத்த ஒரு வள்ளலையும் போன்ற கொடையாளிகளை நாம் எந்நாட்டிற் காணமுடியும்? மயிலுக்குப் போர்வையும், கொழுகொம்பில்லாத கொடிக்குத்தேருங் கொடுத்துதவியோர் நந்தமிழ் வள்ளல்களாவர். 'பாரியொருவனுமில்லை' 'மாரியு முண்டு' எனப் புகழப்படுவதற்கு நந்தமிழ் வள்ளல் பாரியன்றோ பொருட்டாயினர்! என்னே இவர் கொடைத்திறம்.

## வீரம்.

தமிழ்மக்களது வீரத்தை எடுத்துச் சொல்லப்புகின் புலி யடியைக் கண்டவனைக் கண்டோடுகின்றவனும் பெரிய வீரனுப்

விடுவான் என்பது திண்ணம். தமிழப் பெண்களே இணையிலா வீரமுடையவர்களா யிருந்தார்களென்பதைச் சங்கச் செய்யுள்களால் நன்கு அறியலாகும்.

“மேனுள் உற்றசெரு விற்கிவள் தன்னை
யானை எறிந்து களத்தொழிந் தனனே;
நெருநல் உற்றசெரு விற்கிவள் கொழுநன்
பொருநரை விலங்கி ஆண்டுப்பட் டனனே;
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇ
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமக னல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே”

என்ற புறப்பாட்டடிகளினால் ஒரு தாயின் வீரத்தை யுணர்கின்றோம்.

தன் தந்தை போர்க்களத்தில் யானை எறிந்து படவும், மற்றொருநாட்போரில் தலைவன் மாற்றார்களைக்கொன்று தானுமடியவும், சிறிதும் தளர்வின்றி எதிரிகளின் போர்ப்பறையைக்கேட்டுச் சிறுவோனுக்கு ஆடை அணிவித்துக் குடுமியை எண்ணெயிட்டுச்சீவிமுடித்து, ஒரே மகனையுடையவளாயிருந்தும், போர்க்களநோக்கிச்செல்கெனச்சொல்லி அவனையனுப்புகின்றாளாகிய பெண்மணியின் வீரத்தை யாவரே வியக்காமலிருக்க முடியும்?

“நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே”

என்ற செய்யுளால் மற்றொரு தாயின் வீரம் தெரிகின்றது. முதியவள் ஒருதாய் தன் சிறுவன் போரில் வலியிழந்து புறங் கொடுத் தோடினன் என்று பலர் சொல்லக்கேட்டு, 'அவ்வாறு அவன் போரிற் புறங்கொடுத்தவனாயின் அவன் பாலுண்டு வளர் வதற்குப் பொருட்டாயிருந்த என் முலைகளை அறுத்திடுவேன்' என்று சொல்லி வாள் கையிற்கொண்டு போர்க்களம்புக்கு வீழ்ந்துகிடக்கும் பிணங்களைத்துழவுவாள் இருதுண்டாகக் கிடந்த தன் மகனுடலைக்கண்டு ஈன்ற ஞான்றினும் பெரிய தொரு மகிழ்ச்சியை யடைந்தனள். என்னே இவள் வீரம்!

## கற்பு.

தமிழப் பெண்களின் கற்பின் நலம் அதனிலுஞ் சிறந்தது. ஏன்? பிறர் நெஞ்சு புகாமையே தமிழப் பெண்களின் கற்பினை யளக்குங் கருவியாயிருந்தமையின் என்க. பிறர் நெஞ்சு புகாமை யாவது பிற ஆடவர் இவரைப்பற்றி நினையாதிருத்தல். ஆகவே தமிழர் கற்பைப்பற்றிக்கொண்டிருக்கும் கொள்கை எத்தகைத்து! பொய்யில் புலவர் திருவள்ளுவனார் கற்பின்றிறத்தை,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

எனக்கூறிப் போந்தனர். திருவள்ளுவனாரது இக்கட்டளையைச் சாத்தனார் பிறர் நெஞ்சு புகாமை யென்னுங் கொள்கையுடன் சேர்த்து மணிமேகலையில் இவ்வாறு தெரிவிக்கின்றார்:—

"மண்டினி ஞாலத்து மழை வளந்தரூஉம்
பெண்டி ராயிற் பிறர்நெஞ்சு புகாஅர்
.... ... ... ... ...
தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்."

ஆகையால், கற்பின் மணிகளாய் விளங்கிய கண்ணகி, கோப் பெருந்தேவி இவர்களுடைய வரலாற்றினும் தமிழப்பெண்களின்

கற்பின் மேன்மையை யுணர்த்தற்கு வேறு எடுத்துக்காட்டுகள் வேண்டுவதில்லையாகும். எனினும், காரைக்காலம்மையார், திலகவதியார், மங்கையர்க் கரசியார் இவர்களை சினைக்காமலிருக்கவும் முடியாதாகும்.

## பெருந்தன்மை.

பண்டைப் புலவர்கள் பெருந்தன்மைக்கும் பரந்த நோக்கிற்கும் சிறந்த எடுத்துக் காட்டுகளாய் விளங்கினர். இதற்கு அவர்களியற்றிய சிறந்த நூற்களே தக்க சான்றாகும். அவர்களைச் சான்றோரெனவே வழங்கினர் தமிழ்மக்கள். பிற்காலத்துப் புலவரெல்லோரும் சங்கப் புலவரைச் சான்றோரெனவே சொல்லிப் போயினர். கோதாவரியாற்றின் ஒழுக்கினைக் கம்பநாடர் "சான்றோர் கவியெனக்கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்" என்று சங்கத்துச்சான்றோர் கவிபோலிருந்ததென்றார். 'நல்லிசைப் புலவர்' 'பொய்யில் புலவர்' என்ற பெயர்களும் அவர்களுடைய மேன்மையினையே நிலை நிறுத்துகின்றன.

"நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"

என அரசனொருவனை அறிவுறுத்தினர் ஒரு புலவர். 'யாதுமூரே, யாவருங்கேளிர்' என மக்கட் டொகுதியையே சுற்றமென்றனர் ஒருவர். பொருதலை மேற்கொண்ட இரண்டு சோழமன்னரை நோக்கி,

"ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
இருவீர் வேற லியற்கையு மன்றே
நும்மோ ரன்ன வேந்தற்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே"

என்று கூறி அவர்களைச் சேர்த்து வைத்தற்கு முயலுகின்றனர் ஒரு புலவர். இதனாலன்றோ ஒரு மன்னன் வஞ்சினமாகத் தன்னை நல்லிசைப் புலவர் பாடாதொழிக என்றனன்.

## தெய்வத்தன்மை.

தேவாரத் தேனினை மலர்வாய்ப்பெய்த நாவுக்கரசர் பல்லவ மகேந்திரவர்மன் காலத்தவர் என்பது இப்பொழுது வெளியாகி விட்டது. மகேந்திரன் சமண சமயத்தைவிட்டுச் சைவ சமயத்தைச் சார்ந்ததுண்மை யென்பது அவன் வெட்டிவைத்த எழுத்துக்களாலேயே அறியக்கிடக்கின்றன. இதனால் நாவுக்கரசர் புரிந்த தெய்வத்தன்மையான செயல்கள் உண்மையெனப் பிறரும் அறிவர். பெரிய புராணமும், தேவாரத்தின் உள்ளுறைச் சான்றுகளும், மகேந்திரன் கட்டுவித்த சிவாலயங்களும், செதுக்கி வைத்த எழுத்துக்களும் நாவுக்கரசரின் சிறப்பையே உறுதிப் படுத்துகின்றன. ஆதலினால்,

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
யுண்ட பாலனை யழைத்ததும் எலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்.

தமிழ்த்தாய் வாழ்க! தமிழர் வாழ்க!!

மு. கோவிந்தராசன்.

உ

## தமிழ்ச் செய்திகள்.

தமிழ்த் தாயின் தவப் புதல்வராய சிறந்த அறிஞர்கள் கூடி நடாத்தும் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தார் சமய நூல்கள் முதலியவற்றிற் தேர்வுகள் நடாத்திப் பரிசுகள் தரப்போவது உணர்ந்து மகிழ்கின்றோம். இத்தேர்வுகள் தமிழ்க் கல்வியில் பலதரப்படும் ஆடவர், பெண்டிர், மாணவர்கட்கெல்லாம் ஏற்றவாறு பல படியாக அமைந்துள்ளன. தமிழ் மக்களாவார் ஒவ்வொருவரும் இதுபற்றி அச்சங்கம் செய்துள்ள விளம்பரத்திற்கு எழுதிப் பெற்றுத் தேர்வுகட்கு உரியராகிப் பயனுற்று மகிழ்வாராக.